Regd No M. 4900. 16-பக்கங்கள்.

குடி அரசு

ESTD. 1924

உள்நாடு வருட சந்தா ரூ. 7-0-0. தனிப்பிரதி 0-2-0.
வெளிநாடு ,, ரூ. 9-0-0. ,, 0-2-6.

மாலை 22 } ஈரோடு 23-10-1948 சனிக்கிழமை } மலர் 7.

அர்ச்சுனன் பந்தலில் அணி அணியாய்க்கூடும் போர்மறவர்!

★

வடநாட்டு ஏகாதிபத்தியத்துடன்–இந்நாட்டுக் கங்காணிகளுடன்—சுரண்டும் சூதுக்காரர்களுடன்—நாம் நடத்தியே ஆகவேண்டியிருக்கும் இன்றையப் போராட்டத்தின் முன்னணியில் நிற்கவேண்டியவர், என் இன்றைய மாநாட்டிற்குக் கூடத் தலைமை தாங்கவேண்டிய தோழர், இளந்தளபதி அர்ச்சுனன் அவர்கள் இன்று நம்மிடையேயில்லை.

அவரின் நினைவாக மாநாடு அர்ச்சுனன் பந்தலில் நடப்பதும், ஆயிரக் கணக்கான—பதினாயிரக் கணக்கான "அர்ச்சுனர்"கள் போராட்டத்தில் குதிக்கத் துடியாய்த் துடிப்பதும், அவரின் லட்சியம் அடையப்பட்டே தீரும் என்பதற்கு நல்ல அறிகுறிகளல்லவா?

போர்க்களத்தில் கூடுகின்ற நாம், மறவீரன் அர்ச்சுனனின் மாண்புகளை நினைப்போம்! அவரின் சீரிய பண்புகளை–சிறந்த செயல் திறனை வாழ்வில் கொள்வோம்!

★

சிறுவர் பகுதி.

ஓநாயின் ஓலம்!

"தாதா"

ஒரு ஊரிலே ஒரு பெரிய முல்லா இருந்தார். அவருக்கு ஏராளமான சீடர்களும் இருந்தனர். அவர் தன் சீடர்களோடு ஆண்டுக்கு ஒரு முறையாவது மக்கா, மதீனா வரை யாத்திரை (ஹஜ்ஜு) செய்வது வழக்கம்.

ஒரு சமயம், அவர் யாத்திரை செய்யப் புறப்படுங் காலத்தில், உலகெங்கும் கோரப்போர் நடந்து கொண்டிருந்தது. அப்போருக்குப் பயந்து அவர் தனது யாத்திரையை நிறுத்திவிட விரும்பவில்லை.

முல்லாவின் புகழ் உலகமெல்லாம் பரவியிருந்தமையால், கோரப் போர்க் களத்தின் ஊடே யாத்திரை செய்த முல்லாவுக்கும், அவர்களது சீடர்களுக்கும் ஒரு வித தீங்கும் நேராததோடு போரில் மாண்ட பிணங்களின் நாற்றங் கூட அவர்களைப் பாதிக்காமல் உல்லாசமாகப் பல்லக்குகளில் செல்ல முடிந்தது.

இரு தரப்பு சேனாதிபதிகளும் முல்லாவின் கீர்த்தியைத் தெரிந்திருந்தனர். ஆதலால், அவரைச் சீடர்களோடு தத்தம் எல்லைக்குள் தக்க மரியாதையோடு வரவேற்று, மிக்கபாதுகாப்போடு அனுப்பும்போது, அவரவர் படைகளே வெற்றி அடைய வேண்டும் என்று எல்லாம் வல்ல அல்லாஹுத்தாலாவிடம் பிரார்த்தனை (துவா) செய்யுமாறு கேட்டுக் கொண்டனர். அதற்காகப் பொன் நாணயங்களைக் காணிக்கைகளாகவும் கொடுத்தனர்.

முல்லாவும் அப்பொன் நாணயக் குவியலை ஏற்றுக் கொண்டு அவரவர்களிடம் அவரவர் படைகளே வெற்றியுறுமாறு அல்லாஹுத்தாலாவிடம் சிபார்சு செய்வதாகக் கூறிவிட்டு சென்றார்.

போர்க்களத்தின் இடையே பாலைவனமும் வந்தது. பகல் பனிரெண்டுமணிக்குப் பாலைவனத்தில் நடக்கும் ஒட்டகங்கள்கூடக் களைத்துவிடும் என்றால், பாவம்! முல்லாவும் சீடர்களும் களைக்காமல் இருக்க முடியுமா? நல்லவேளையாக அவர்கள் அந்நேரத்தில் ஒரு பாலைவனச் சோலையை அடைந்தனர்.

பாலைவனச் சோலையில் ஒரு சிறு ஊற்றுநீரும், கொஞ்சம் பசும் புல் தரையும், சில பேரீச்ச மரங்களும் இருந்தன. அச்சோலையில் தங்கிய முல்லா தன் சீடர்களுடன் கொஞ்சம் பேரீச்சங் கனிகளையும், ஊற்றுநீரையும் அருந்திக் களைப்புத் தீர்த்துக்கொண்டதும், பகல் தொழுகையை ஆரம்பித்தார்.

தொழுது முடிந்தவுடன் ஆகாயத்தை நோக்கித் தம் கரங்களை ஏந்தி 'ஏ! அல்லாஹுத்தலாவே! உன் கருணையை என்னென்று புகழ்வேன்! சூரியனின் கொடிய வெப்பத்தால் உருகும் மணல் வெளியாகிய இப்பாலைவனத்தில் கூடஉன்னுடையபடைப்புகளாகிய நாங்கள் களைப்பாறுவதற்கென்று குளிர்ந்த சோலையும், கனிந்த கனியும், தெளிந்த நீரும் தந்திருக்கிறாயே! இதுபோலவே, துன்பமயமான இவ்வுலக வாழ்க்கையில் இடைஇடையே எங்களுக்கு இன்பமும் அருள்வாயாக!' என்று வேண்டிக்கொண்டிருந்தனர்.

அப்போது அப்பிரார்த்தனையைக் காதில் கேட்டுக்கொண்டே அங்கு வந்து சேர்ந்த பாரசீக தேசத்து வழிப்போக்கன் ஒருவன் 'சாராயக் கிண்ணம்போல் கவிழ்ந்திருக்கும் ஆகாயத்தை நோக்கிக் கரங்களை ஏந்தும் அறிவீனர்களே! ஆகாயத்திலிருந்து வரக்கூடியது, வெயிலும், மழையும், காற்றும் அன்றி வேறே என்ன இருக்கிறது?' என்று முணுமுணுத்துக் கொண்டிருந்தான்.

அதைக் கவனித்த முல்லா அவனை நோக்கி 'நீயார்?' என்று கேட்டார். 'நான் பாரசீகக் கவிஞர் உமர் கய்யாமின் உண்மைச் சீடன்' என்றான் அவ்வழிப்போக்கன். அதைக் கேட்டு மகிழ்ச்சி அடைந்த முல்லா அவனையும் தன்னோடு வருமாறு அழைத்துக் கொண்டு அங்கிருந்து புறப்பட்டார்.

சில தினங்கள் கழிந்தன. முல்லாவின் வழியில் ஒரு சிறு மலங்காடு குறுக்கிட்டது. அம் மலங்காட்டில் ஆங்காங்கு ஏராளமான வீரர்களுடைய பிணக்குவியல்கள் தென்பட்டன. அவ்வழியே முல்லா தன்சீடர்களோடு சென்று கொண்டிருக்கும்போது, ஓநாயின் ஓலம்பலமாகக்கேட்கஆரம்பித்தது.

முல்லா, பாரசீக தேசத்து வழிப்போக்கனை நோக்கி 'உமர்கய்யாமின் உண்மைச் சீடனே! இந்த இவ்வாறு ஊளையிடும் "ஓநாயின் ஓலம்" எதைக் குறிக்கிறது? உனக்குத் தெரியுமா?' என்று கேட்டார்.

அப்போது அவ்வழிப்போக்கன் 'ஆகா! எனக்கு நன்றாகத் தெரியும்! அது நம் அல்லாஹுத்தாலாவை நோக்கிப் பிரார்த்தனை செய்து கொண்டிருக்கிறது' என்றான்.

'என்ன ஆச்சரியம்! அந்த ஓநாயின் ஓலமும் ஒரு பிரார்த்தனையா! அது எப்படி உண்மையாக இருக்க முடியும்?' என்றார் முல்லா.

அதற்கு அவ்வழிப்போக்கன் 'உண்மையோ! பொய்யோ!! அந்த ஓநாயின் ஓலமாவது:—ஏ! அல்லாஹுத்தாலாவே! உன் கருணையை என்னென்று புகழ்வேன்! என் வயிறு நிறையப் புசிப்பதற்குச் சரியான உணவு கிடைக்காமல் நான் எவ்வளவோ காலம் இந்தக் காட்டில் திண்டாடித் திரிந்தேன். ஆனால், இப்போது என்னைக் காப்பாற்றுவதற்கென்று சுத்த வீரர்களின் இரத்தமும், சுவையுள்ள இறைச்சியாகிய வாலிபவீரர்களின் பிணங்களையும் தந்திருக்கிறாயே! இதுபோலவேதுன்பமயமான இக்காட்டு வாழ்க்கையில், இடை இடையே எனக்கு இன்பமும் அருள்வாயாக! என்று தானே பிரார்த்தனை செய்யும்' எனக்கேட்டான்.

முல்லாவின் மூளையில் சுரீரென ஒரு உணர்ச்சி பாய்ந்ததுபோலிருந்தது. அவர் பாலைவனச் சோலையில் செய்த பிரார்த்தனையை மீண்டும் ஞாபகப்படுத்திக்கொண்டிருந்தார்.

பாரசீக தேசத்துவழிப்போக்கன் அவ்வளவோடு முல்லாவிடம் விடைபெற்றுக் கொண்டு திரும்பிப் போய்விட்டான்.

சிறுவர்களே! இயற்கை உலகில் ஆச்சரியப்படக்கூடிய விதமான இன்ப துன்பங்கள் நிறைந்திருக்கலாம்! ஆனால், கருணையே உருவான ஒரு சக்தியோ அல்லதுஉலக பரிபாலனமோ இல்லை என்பதைத்தான் இக்கதையிலிருந்து நீங்கள் உணர்ந்து கொள்ளவேண்டும்.

ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

இராவண காவியம் எதற்கு?

"கோங்கிளங்கோ"

கேள்வி வேடிக்கையான கேள்வி தான். கொஞ்சம் வியப்பைத் தருங் கேள்வியுங்கூட. அய்ம்பெருங்காப்பியங்கள், அய்ஞ்சிறுங் காப்பியங்களெல்லாம் எதற்கு? பெரிய புராணம், திருவிளையாடல் புராணம் எல்லாம் எதற்கு? நளவெண்பா இருக்க, நைடதம் எதற்கு? அல்லது நைடதம் இருக்க நளவெண்பா எதற்கு? வில்லி பாரதமிருக்க நல்லாப்பிள்ளை பாரதம் எதற்கு? ஒன்றிரண்டு மூன்று திருவிளையாடல் புராணங்களும், பதினான்கு சித்தாந்த சாத்திரங்களுமெதற்கு? நான்கு வேதம், ஆறங்கம், பதினான்கு தரும சாத்திரம், பதினெண் புராணம், இருபத்தெட்டாகமம், நூற்றெட்டு உபநிடதம் எல்லாம் எதற்கு? இது என்ன சிறுபிள்ளைத்தனமான கேள்வி? அவையெல்லாம் எதற்கென்பது கூடத்தெரியாதவனா கேள்வி கேட்கத்தொடங்கி விட்டாய்? தெரிந்து கேட்கிறாயா? அல்லது தெரியாமலேதான் கேட்கிறாயா? அல்லது தெரிந்துந்தெரியாமலுங் கேட்கிறாயா? நீ எப்படிக்கேட்டாலும் சரி. அவையெல்லாம் படிக்கத்தான். படிப்பது எதற்காகவென்று கேட்டு விடாதே. படிப்பது அறிவு பெறுவதற்காகத்தான். வேண்டுமென்றால் படியாதவரை ஏமாற்றுவதற்கென்று வைத்துக்கொள். உலகில் பல மொழிகள் வழங்கி வருகின்றன. ஒவ்வொரு மொழியிலும் எண்ணிறந்த இலக்கிய இலக்கண நூல்கள் எழுதப்பட்டுள்ளன. ஒரே பொருளைப்பற்றிய பத்துப் பதினைந்து நூல்கள்கூட உள்ளன. இவை ஒரு நூலைச் சுருக்கியோ, பெருக்கியோ, அல்லது சுருக்கியும் பெருக்கியுமோ எழுதப்பட்ட வழி நூல்களாக இருக்கும். அல்லது அதன் எதிர் நூல்களாக இருக்கும். தமிழ், வடமொழி முதலிய எல்லா மொழிகளிலும் இவ்விருவகை நூல்களும் நிறைய உள்ளன. இப்படியிருப்பது இயல்புமாகும். இது கற்றவர்களுக்கெல்லாம் தெரிந்ததொரு செய்தியேயாகும். "இராவண காவியம் எதற்கு?" என்ற கேள்வியைக் கேட்டவர்க்கும் இது தெரிந்திருக்குமென்றே நம்புகிறோம். தெரிந்தோ? தெரிந்துந்தெரியாமலுமிருந்தோ? அல்லது தெரியாமலேயிருந்தோ? கேட்டிருந்தாலும் சரி. 'எதற்கு' என்பதை அறிவுறுத்தவேண்டியது, அவர் புரிந்து கொள்ளும்படி விளக்கிக் கூறுவது, அவருடைய இப்பேரய்யத்தைத் தீர்த்து வைப்பது நமது கடமையாகும். இன்றியமையாத கடமையுங்கூட ஆகும்.

இக்கேள்வி யாரால், எப்போது, ஏன் கேட்கப்பட்டது? பழந்தமிழராகிய நமது முன்னையோர் ஒழுக்க முறைகளை, நாமும் அறிந்து கொள்வதற்காகப் பேரிலக்கண நூல் எழுதி வைத்த 'தொல்காப்பியர்' இருக்க, பழந்தமிழ் மக்களின் அகம்புற வாழ்வை, அருந்தமிழ்ப் பாக்களில் அமைத்துக்கொடுத்த பன்னூற்றுக்கணக்கான 'சங்கப்புலவர்கள்' இருக்க, உலகப் பொது நூலாகிய ஒப்புயர்வற்ற திருக்குறளை நமக்குத்தந்த 'வள்ளுவர்' இருக்க, கற்றார், கல்லார் ஆகிய எல்லாத் தமிழ் மக்களுக்கும் அறிமுகமானவரான அவ்வை மூதாட்டியார் இருக்க, இமய முதல் குமரி வரை ஒரு மொழி வைத்துலகாண்ட தமிழர் பெருமைக்கோர் அகச்சான்றாக உள்ள சிலப்பதிகாரத்தைத் தந்த இளங்கோவடிகள் இருக்க, தண்டமிழாசான் சாத்தனாரிருக்க, இன்னும் எத்தனையோ செந்தமிழ்ப் புலவர்கள் இருக்க, வரையாது கொடுத்துத் தமிழ் வளர்த்த வள்ளல்களிருக்க, அவர்களுக்கெல்லாம் திருநாட்களில்லை, பெருநாட்களில்லை, கொண்டாட்டமில்லை, மாநாடுகளில்லை. அவர்களில் பலர் பெயர்களைக் கூடத் தமிழ் மக்களுக்கு அறிமுகப்படுத்தி வைப்பதில்லை. அறியவும் விடுவதில்லை. ஆனால்,

அப்புலவர்களில் ஒருவரான கம்பருக்கு மட்டும் திருநாளும், பெருநாளும் கொண்டாடப்பட்டு வருகின்றன சில ஆண்டுகளாக. யாரால்? தமிழர்களாலா? இல்லை. தமிழர்பணத்தைக் கொண்டு மயிலாப்பூர்க்கும்பலால்! ஏன்? எதற்காக? ஒரு சூத்திரன் திருநாளைப் பார்ப்பனர், உயர் குலத்தோராகிய பூதேவர்கள், முகத்தில் பிறந்த முதற்குலத்தோர்கள் முதன்மையாக முன்னின்று கொண்டாடுகின்றனர்? கம்பர் அன்னார்க்குச்செய்து வைத்துப்போன நன்மைகளென்ன? அப்படிக்கேள்தம்பி! அங்குதான் இருக்கிறது சூட்சுமம், தந்திரமென்றுங் கூடச் சொலலலாம். சுயநலம் என்பதே பொருத்தமான பொருளாகும். எப்படி? முற்கூறிய புலவர் பெருமக்களெல்லாம் தமிழர் வாழ்வுக்காகத்தம் தமிழ்ப்புலமையை, தமிழைப் பயன் படுத்தினர். கம்பரோ தமிழர் வீழ்வுக்காக, தமிழரின் குலப்பகைவர்களான ஆரியர்வாழ்வுக்காகத் தமிழை, தமிழ்ப்புலமையை, தமிழ்க்கவித்திறனைப் பயன்படுத்தினார். தமிழரை ஆரியத்துக்கு, ஆரியர்க்கு அடிமையாக்கத் தமது கவித்திறத்தைப் பயன்படுத்தினார். தமிழ்க்கவித்திறத்தைக்கருவியாகக் கொண்டார் எனலாம். ஆரியப் பார்ப்பனர் தமிழ் நாட்டில் நிலையாக, அமைதியாக, உடலுழைப்பின்றி உயர் மக்களாக வாழ்வதற்கு வழி செய்து கொடுத்தவர் கல்வியில் பெரியவரான கம்பரேயாவர். அதனாலேதான் மயிலாப்பூர் வன்தமிழர்கள் கம்பர் திருநாள் கொண்டாடிவருகின்றனர். அனுமான், சுக்ரீவன், அங்கதன், விபீடணன் போன்ற சில மானங்கெட்ட தமிழர்களும், ஆரியத்துக்கு அஞ்சி வாழும் தமிழ்த்தலைவர்கள் சிலரும் அவர்களோடு கூடிக்கொண்டு அத்திருநாளைச் சிறப்பிக்கின்றனர் பாவம்!

இம்மாதம் 8, 9, 10 நாட்களில் (1948 அக்டோபர்) சென்னையில் நடந்த கம்பர் மாநாட்டில் சொற்பொழிவாற்றிய- கம்பராமாயணத்தின் சில கவிகளை யெடுத்துச் "சித்திரராமாயணம்" என ஆனந்தவிகடனில்எழுதித் தமிழ் மக்களுக்கு ஆரியமயக்க மருந்தூட்டி வரும் "பி ஸ்ரீ" ஆச்சாரியார் என்பவர்தான் மேற்படி கேள்வியைக் கேட்டவர். ஏன்? எதற்காக இவ்வாறு கேட்டாரென்பதைஅவர் அக்கேள்விக்கு விடையாகக் கூறிய கூற்றைக் கொண்டே தெரிந்துகொள்ளுங்கள். அவர் கூறிய அக் கூற்றை, 12-10-48 சுதேசமித்திரன் 5-வது பக்கத்தில் உள்ளபடியே தருகிறோம். அதாவது,

"இராவண காவியம்" என்ற ஒரு நூல் வெளிவந்ததையும், அரசாங்கம் அதற்குத் தடை விதித்திருப்பதையும் பற்றிப் பிரஸ்தாபித்து, இராவண காவியம் என்ற ஒரு தனி நூல் அவசியம் இல்லை. ஏனெனில், கம்பராமாயணத்தையே இராவண காவியமாகவும் கொள்ளலாம். இராவணனுடைய பராக்கிரமத்தையும் கம்பன் சித்திரித்திருப்பதைச் சற்றுக்கவனித்தால் இதன் உண்மை விளங்கும்.

ஆங்கிலப் பேராசிரியரான மில்டன் என்பவன் இயற்றியுள்ள "சுவர்க்க நீக்கம்" என்ற அரிய கவிதையில், சைத்தான்தான் முக்கிய நாடகப் பாத்திரம். அதேபோல், கம்பராமாயணத்திலும் இராவணனுடைய முக்கியத்துவம் குறைக்கப்படவில்லை. ஒரே ஒரு அடிப்படையான வித்தியாசம் என்னவெனில், ராமனுடைய வீரம், அறம் வளர்க்கும் வீரம்; இராவணனுடைய வீரம் மறம் வளர்க்கும் வீரம். ராக்ஷஸ ராஜ்யத்தைக் கம்பன் வர்ணித்திருக்கும் முறையைப் பார்க்கும்போது, கம்பன் ராமபக்தனா? அல்லது இராவண பக்தனா? என்று கூடச் சந்தேகப்பட வேண்டியிருக்கிறது. கபந்தன், விராதன், கும்பகர்ணன் முதலியவர்களைப் பற்றிக் கூறுகையில், கம்பன் புனைந்திருக்கும் ஹாஸ்யச் சித்திரம் சொல் நயம், பொருள் நயத்துடன் விளங்குகிறது."

இவைதான் ஆச்சாரியாரவர்கள் "இராவண காவியம் எதற்கு?" என்ற கேள்விக்குக் கூறும்விடையாகும். இவ்விடை உண்மையாகவே அக்கேள்விக்கேற்றவிடையாகுமா? என்பதுதான்

(தொடர்ச்சி 13-ம் பக்கம்)

கதை கற்பனை.

சிறுகதை
இரண்டாம் பருவம்

சவக்குழி.

போட்டி
எண் 6.

புயலுக்கு முன்னுள்ள அமைதி! போலீஸ் பட்டாளத்தின் புன்னகை—கும்பல் கும்பலாக கூடி நின்ற தொழிலாளர் வெள்ளத்தின் வேதனை அலை மோதல்—ஆஜ்ஞையிட்டு அடக்குமுறை செய்து, ஆள அவதரித்ததாக அகமகிழ்ந்து நின்ற ஆலை அதிபர்கதிரேசரின் கம்பீரக் குரல்—அவற்றைக்கிழித்துக் கொண்டு 'சுதந்திரா' மில் சங்கு ஊளையிட்டது.

ஆம். வாழ்வைத்தீய்ப்போரை வந்து குவியக் கட்டளையிடுகின்ற அழைப்பொலி! உழைப்போர் திரளிலே அசைவில்லை. ஒன்று கூடிய சாந்தம்! அவர்களின் எண்ணத்திலே, தங்கள் உடல் கொட்டும்இரத்தத்துளிகளைஉல்லாசச் சீமான்களின் உயர் நிலைக்கு அர்ப்பணித்து, அவர்களின் அலங்கார வாழ்வுக்கு மெருகு பூசச்செய்யும் பயங்கர அழைப்பு அது!

கதிரேசரின்உடல் துடித்தது. "கூலி நாய்கள்! ஆணைக்கு உடங்கமறுப்பதா? கோரிக்கை, நிபந்தனை...என்னிடமா?... இன்ஸ்பெக்டர்! எல்லாம் தயார் தானே!" என்று கத்தினார்.

"அது எனது கடமை! தங்கள் உடலுக்குப் பாதுகாப்பு அதோ நீட்டிய துப்பாக்கிகள்..." என்றார் இன்ஸ்பெக்டர்.

தூரத்தில் தொழிலாளரின் ஆர்ப்பரிப்பு! இங்கே அவர்களின் எழுச்சியை நசுக்க சதிப்பேச்சு!—அதற்குத்துணையாக ஆள்வோர் அனுப்பிய அணிவகுப்பு

* *

"தோழர்களே! ஆணவத்தின் உரு அசைந்து கொடுக்காது. அதோ உங்கள் எக்கத்தின் எதிரொலிக்குப்பதில் துப்பாக்கிமுனை. இறுதியாகச்சென்று பார்க்கிறேன். அப்படியும் மறுத்தால் சாவு அல்லது வாழ்வு என்றபோர் முனையிலே ஒன்று கூட வேண்டியதுதான்......"

பாட்டாளி பக்கத்திலிருந்து எழுந்தது அந்தக்குரல்!

குரல் புறப்பட்டதிக்கு நோக்கி இரு கண்கள் சுழன்றன. தொழிலாளர்களின் பேரிரைச்சலைக் கெட்ட அதேநேரத்திலே, ஒருஇளைஞன் தன்னிடம் வருவதைக் கண்டார் கதிரேசர்.

"வா, வா! பாம்போடு விளையாட வருகிறாயா?" என்று அவரது வாய் முணு முணுத்தது.

"குமார்" திடுக்கிட்டு நின்ற இன்ஸ்பெக்டர் வாயிலிருந்து உதிர்ந்தது.

"குமார்! ஆம்; உங்கள் தம்பி குமார்!" என்று பயங்கரமாக நகைத்தார் ஆலை அரசர்.

"அய்யா!..." என்று எதோ சொல்லப் போனார் இன்ஸ்பெக்டர்.

"இருங்கள் இன்ஸ்பெக்டர்! உங்கள் தம்பி...புரட்சி வீரன்...போக்கிரிப் பயல்களின் தலைவன் இதோ வந்து விட்டான்...என்ன தம்பி! என்ன... அந்தக் கூலி நாய்களுக்குத் தூது வந்தாயோ?......"

குமாரின் முகத்தில் சிவப்பேறியது. "யோசித்துப் பேசுங்கள்! உங்கள் கேலி, சிரிப்பு, எல்லாம் அப்புறம் ஆகட்டும். எனக்குத் தேவை பதில்! இறுதியாக..."

"ஆத்திரப்படாதே தம்பி! கொஞ்சம் பொறுமையாகவே பேசு...அண்ணன் பக்கத்தில் இருக்கிறார் என்ற தைரியமா?..."

இன்ஸ்பெக்டர் பல்லைக் கடித்தார். கதிரேசர் அலட்சியமாகச் சிரித்தார்!

"தம்பி! பதிலா வேண்டும்? அதோ பார் என் பதிலை!...அந்தப் பயல்கள் மட்டும் முரண்டு பண்ணினால், பட்டினியாகக் கிடந்து சாகவேண்டியதுதான்..."

"உலுத்தர்களிடம் உழைப்பதை விட இந்த உலகத்தை விட்டு ஒழிந்து விடுவதேமேல்...எத்தர்களிடம் ஏவலராக இருப்பதை விட இறந்துபோவதே நலம்..."

கதிரேசரின் ஆத்திரம் அளவு மீறி விட்டது. உதடுகள் படபடத்தன. "பொடிப்பயலே! போய்விடு...போக்கிரிப்பயல்களின் தலைவனே! ஓடிவிடு!!..." என்று சத்தமிட்டார்.

குமாரின் கால்கள் வேகமாகத் திரும்பிச் சென்றன. சிறிது நேரத்திலே அவன் முழக்கம் கேட்கத் தொடங்கியது.

*

"சென்றேன் ... சிரித்தான் ... செருக்கு சிறிதும் குறையவில்லை. எனக்குப் பதில் ஏச்சும், கேலியும் தான்..."

அவன் பேசினான். உழைப்பாளர் உள்ளங்கள் துடித்தன. அந்த நெடிய பரப்பு குமுறிக்கொண்டிருந்தது. இளந் தலைவன் வாயசைப்பின, அதே நேரத்திலே, ஒரு பெரிய பயங்கரமான போர்க்களத்தையே உண்டாக்க ஆயத்தமாக இருந்தனர்.

உயரமான ஒரு இடத்தில் குமார் நின்று கொண்டு பேசக்கண்டார் கதிரேசர். வெந்த உள்ளங்கள் செய்யும் வேதனை அலைகளின் சலசலப்பும் தெரிந்தது. கர ஒலி, உணர்ச்சிக்கூச்சல், ஆரவாரம்—அதன் மத்தியிலே அவனுடைய அமைதி கலந்த ஆவேசச்சொற்கள் எதிரொலித்துக் கொண்டிருந்தன.

விநாடிக்கு விநாடி கதிரேசரின் உடலில் விஷம் ஏறிக்கொண்டிருந்தது. இரத்தத்தாரைகள் புடைத்து முறுக்கேறின. இறுமாந்த நெஞ்சத்தில் பழியுணர்ச்சி நிறைந்து வழிந்து கொண்டிருந்தது. அவரால் இனிப் பொறுக்க முடியாது என்ற அளவுக்கு வந்தபோது, எதிரே, கூலிப்பட்டாளத்தின் நடுவிலே தன் கூற்றமே உருவெடுத்து நிற்கிறதென்று எண்ணினார்.

அவன் நிற்கும் நிலை, பேசுகிற தோரணை, அகங்காரபுரியைப்பிடித்து உலுக்குகிற கருத்துக் கனற்பொறிகள் எல்லாம், சற்று நேரத்திலே அங்கு பெரும் புயல் தோன்றப்போகிற அறிகுறிகள் என்று ஆலை அதிபர் மட்டுமல்ல—அவரைக்காக்க வந்த காவற்படையும் நினைத்து எதிர் நோக்கியது.

அவன் அமைதி குலையத் தீப்பந்தம் ஏந்துகிறான் என்பது அவர்களின் எண்ணம். உள்ளபடியே அப்படித்தானா?

அணை பிளந்து பாய எத்தனிக்கும் வெள்ளம். அதன் முன்னே அவன்! உழைப்போர் வெறி கொண்டு தாவுதலை, தன் முழுப் பலம் கொண்டு தடுத்து நிறுத்திகொண்டிருந்தான். ஆனால் இந்தப் பணவேந்தர் பகுதி அதனை வேறு விதமாகக் கருதி, பாதகப்பாதையை நோக்கிச் செல்லத் தருணம் பார்த்தது.

எதிர் முகத்திலே ஒரு மின்னல்! அதனைத் தொடர்ந்து இடியோசை போன்ற ஆர்ப்பரிப்பு! அந்தப்பெருங் கூட்டம் அவரை நோக்கி நகர முயல்வது போல் ஒரு பிரேமை! கதிரேசர் யுத்த சன்னத்தமாகி விட்டார்.

"அவன்...அவன்..." என்று கூச்சலிட்டார். அருகிலிருந்த போலீஸ் அதிகாரி அவரைக் கட்டுப்படுத்தச் செய்த முயற்சி பலிக்கவில்லை. கதிரேசரின் கண்கள் கனல் ஏறிப்புரண்டன.

"சுடுங்கள்! அதோ அந்தத் தலைத் திமிர் பிடித்த பயலைச்சுட்டு வீழ்த்துங்கள்!!...அவன் கலகக்காரன்..." என்று இரைந்தார்.

"அவசரப்படாதீர்கள். ஒருவேளை நம் உத்தேசம் தவறாக இருக்கலாம்..."என்றார் அதிகாரி.

"இல்லை. ஒருக்காலும் இருக்க முடியாது. அவன் கொடியன்......

[தொடர்ச்சி 13ம் பக்கம்]

ரோஜா முத்தையா
ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

மூட நம்பிக்கை.

இங்கர்சால்.

தமிழாக்கம்: அரங் கண்ணல்.

☆

பழமை நெளிந்த அந்தக்காலத்திலே மக்கள் பூமி தட்டையாக இருக்கிறது—அதற்கு மேல் 'கடவுள்' வாழ்கிறார், கீழே துர்த்தேவதைகள் வாழ்கின்றன என்பதாக நம்பினர். கடவுளும் அவரது பரிவாரங்களும் மூன்றாவது மாடியிலும் கெட்ட தேவதை, பேய் பிசாசுகள் கடைசி—அடித்தளத்திலும், மனிதவர்க்கம் இரண்டுக்குமிடையில் நடுத்தளத்திலும் வாழ்வதாக்வும் கருதினர்! பின்னர் சுவர்க்கம் இருக்கும் இடம், அங்கே நிலவும் நறுமணம், வேத ஒலிகள் ஆகியவைகளைப்பற்றித் தெரிந்து கொண்டனர்! நரகம் எங்கேயிருக்கிறது என்பதையும், அங்கே எழும்பும் வேதனை ஒலிகள், கெட்ட நாற்றம் முதலியவைகளையும் புரிந்து (?) கொண்டனர்!

நம்பிக்கை மனப்பான்மை நர்த்தனம் புரிந்த அந்தக்காலத்தில் மதக்குருமார்கள் சுவர்க்கம் நரகம் ஆகியவைகள் பற்றிய எல்லா விவரங்களையும், நம்பிக்கை, பயம், நல்லுறுதி, தண்டனை ஆகியவைகளால் கடவுள் உலகத்தை ஆள்கிறார் என்பதையும் தெரிந்து (?) கொண்டிருந்தார்கள்! தெரிந்துகொண்டவர்களாகக் கூறியதோடு கடவுள் தரும் பரிசு மோட்ச சாம்ராஜ்யம்; தண்டனை நரக வாதனை என்றும் கூறினர். நல்லனகொண்டு தீயன விலக்கும் வகையில் மனித மூளையை முன்னேறச் செய்வதென்பது கடவுளின் 'திட்டமாக' இல்லை போலும்! எனவே, கடவுள் பயந்து பணியும் அறியாமையைத் தந்தார்; அப்படி பயந்து பணிந்தால் பரிசாக மோட்ச சாம்ராஜ்யத்தைத் தந்தார்! கடவுள் முழங்காலிட்டு வேண்டியவர்களை, 'தோத்திரம்' செய்தவர்களை, அடங்கியிருந்தவர்களை விரும்பினார்—அவர்கள் மீது அன்பு செலுத்தினார்! சந்தேக மனப்பான்மையுடையவர்களை, காரணங்கேட்பவர்களை, சுயபுத்தியுள்ளவர்களை, தத்துவ அறிஞர்களைக் கடவுள் வெறுத்தார். இவர்களுக்காகத் தன் வெறுப்புப் பசியை கடைசிவரை தீர்த்துக் கொள்வதற்காக வேதனைச் சிறையை—நரகத்தை—உண்டாக்கினார். காரணங்கேட்காது சொன்னதும் நம்புபவர்களை—அறியாமைத் தொட்டிலில் ஆடியவர்களை கடவுள் நேசித்தார், அவர்களுக்காக இன்பம் நிறைமோட்சத்தை அமைத்தார்! எனவே கடவுள் கேட்பாரில்லாத—சுயமூளையில்லாத—கும்பலின் நட்பால் மகிழ்ந்தார்!

சுவர்க்கமென்பது எங்கே? நரகம் என்பது எங்கே இருக்கிறது?......மேக மண்டலத்தைத் தாண்டி கொஞ்சதூரத்தில் சுவர்க்கம் என்பது இல்லையென்பதும் அதேபோல பூமிக்கு அடியில் சிறிது தொலைவில் நரகம் என்பது கிடையாது என்பதும் இப்பொழுது நமக்குத்தெரியும். இந்த ஆராய்ச்சி யுகத்தில் 'இந்த' ஆத்மார்த்திகநாடுகள்-கற்பனா உலகங்கள் மறைந்து விட்டன! வானத்தை அண்ணாந்து பார்த்து அங்கே கூறப்படும் சுவர்க்கம் இருக்கிறதாவென அறிய தூரதரிசினி (Telescope) இருக்கிறது இப்பொழுது நம்மிடையே. அதேபோல பூமிக்கடியில் என்ன இருக்கிறது என்பதையறியவும் இந்த நவீனயுகத்தில், நம்மால் முடியும். சுவர்க்கம் எங்கே இருக்கிறது, நரகம் எந்த இடத்தில் அமைந்திருக்கிறது என்பன யாருக்கும் தெரியாது. தெரியவோ அல்லது தெரிந்ததாகப்பாசாங்கு செய்யவோ கூட எவரும் முயன்றது இல்லை. இப்பொழுது ஆத்மீகவாதிகள் 'சுவர்க்கமும் நரகமும் தனிப்பட்ட இடங்களல்ல; அறிவு-நிலைமை ஆகியவைகளைப் பொறுத்ததே அவைகள், என்று வேதாந்தம் பேசுகின்றனர்!

கடவுள்கள், பேய்பிசாசுகள் மாட்டு உலகமுழுமையுமே நம்பிக்கை இருந்து வருகிறது. 'நல்ல காரியம்' என்றால் கடவுளால் ஏற்பட்டதெனவும், 'கெட்டது' என்றால் பேய்பிசாசுகள் விளைவித்ததென்றும், உடல் நிலை சுமுகமாகயிருப்பது, நல்ல அறுவடையேற்பட்டது கடவுள்களின் கருணை-செயல்—என்றும்; கெட்ட நிகழ்ச்சியாகமரணமோ, வியாதியோ, துர்ச்சம்பவோ ஏற்பட்டால் அது கெட்டதேவதைகள் விளைவித்ததென்றும், மனிதன் நல்ல செயலுக்குப்பின் கடவுளையும், கெட்ட நிகழ்ச்சிக்குப்பின் பேய்பிசாசுகள், கெட்ட தேவதைகளையும் ஓட்டினான்! கடவுள்கள், கெட்ட தேவதை—பேய் பிசாசுகள்-இருக்கின்றன என்பதற்கு ஏதாவது சான்று உண்டா?

'கடவுள் இருப்பதாகக் காட்டுவதற்கு எவ்வளவு சான்றுகள் உண்டோ அவ்வளவே கெட்ட தேவதைகள் இருக்கின்றன என்பதற்குள்ள அத்தாட்சிகள்! இந்த இரண்டும் மனித உள்ளம் சிருஷ்டித்த கற்பனைகளே! இவைகளை யாரும் கண்டதில்லை—காணவும் இயலாது! எனவே, இப்பொழுது அறிவுள்ள மனிதன் எவனும் பேய் பிசாசு, , சைத்தான் இருப்பதாக எண்ணி நடுங்கமாட்டான்!

இப்பொழுது மக்கள் 'தெரியாதது' 'முடிவற்ற சக்தியுடையது' என்று பேசுகின்றனர். ஆனால் அதேவேளையில் யெகோவாவை ஜூபிடருடன் பொருத்தவேசெய்கின்றனர்! இந்த இரண்டையும் உடைந்த பொம்மைகளாக, அதுவும் முன்பு இருந்து பின்னர் உடைந்தபொம்மைகளாகவேமதிக்கின்றனர்.

காரணங்கேட்கும் எந்த ஆணும் பெண்ணும்—உண்மையை அறிய விரும்பும் யாரும்—சகுனங்களையோ சைகைகளையோ, ஆச்சரியம் என்று கூறப்படுபவைகளையோ, அதிர்ஷ்டம் துரதிர்ஷ்டம் வாய்ந்த நகைகளையோ, நாட்களையோ அல்லது 'நம்பர்'களையோ, எரி நட்சத்திரங்களையோ அல்லது கிரகணங்களையோ பொருட்படுத்துவதில்லையென்பதோடு, . நல்லது அல்லது கெட்டது என்கிற ஆவிகளிடமோ, கடவுள்கள் அல்லது கெட்ட தேவதைகள் மீதோ எந்தவிதமான நம்பிக்கையும் கொள்வதில்லை!

ஆபத்திலிருந்து நல்லவர்களைக் கடவுள் காப்பாற்றுகிறார், கெட்டவர்களைத் தண்டிக்கிறார் என்பதைச் சிந்தித்து உணர்பவர்கள் இப்பொழுது நம்பமாட்டார்கள்!

ரோஜா முத்தையா

துடிக்கும் உள்ளம்!

★

தேடரிய மொழிவளத்தைப் பெற்றிலங்கும்
செய்யதமிழ் நிலவுகிற தமிழர் நாட்டில்,
நாடுயர வழிகூறும் இலக்கியங்கள்
நல்லகலை நூற்களொடு பலவிருக்கக்,
கேடிழைக்கும் இந்தியினைப் பயிலச்சொல்லும்
சிழ்மையினை எண்ணியுளந் துடி துடித்து
ஓடுகின்ற செங்குருதி தடைப்பட் டாற்போல்
உணர்விழந்து நின்றுவிட்டேன் சிறிது நேரம்.

இனியகனி இருக்கையிலே அதனை நீக்கி,
எட்டியினைப் புசித்திடுக! என்று சொன்னால்
தினையளவு அறிவேனும் உளதா இந்தத்
தீச்செயலைப் புரிபவரே அமைச்ச ரானார்!
இனியதமிழ் நாட்டாட்சி இவர்கள் கையில்
இருக்கும்வரை மனிதவுள மிருப்ப தெங்கே?
எனஎண்ணி உளந்துடித்தேன். துடிக்கு முள்ளம்
“எடுவாளை! போர்தொடங்கு!” என்ற தங்கே.

துடிக்குமுளக் கட்டளையை நிறைவேற் றற்குத்
தோளினிலே வாள்சுமந்து களத்தை நோக்கிக்
குடுகுடென ஓடினேன். தமிழர் பல்லோர்
கொதித்தெழுந்த வேங்கையாய் நின்றிருந் தார்!
அடலேறாம் தளபதியும் முன்னே செல்ல
அனைவருமே பின்பற்றிச் செல்லு கின்றோம்!
மடித்திடுவோம் பகைவர்களை! பகைப்புலத்தை!
மாளவிலை யென்றாலோ மடிவோம் நாங்கள்!

“சாமி பழனியப்பன்”

மனித சரித்திரத்தில் ஆதிமுதல் இன்றுவரை என்றாவது ஒரு நாள் ‘வேண்டி’க்கொண்டதற்கு ‘பலன்’ கிடைத்தது என்பதை ஒப்பமாட்டார்கள். புழு பூச்சிகளைவிட அதிகமாக, விசேஷமாக மனிதர்களுக்கென உலகம் உண்டாக்கப்பட்டது என்பதையும் அவர்கள் ஏற்கமாட்டார்கள். எஸ்கிமோக்களுக்கு கொழுப்பைத் தருவதற்காகவே திமிங்கலங்கள் உண்டாக்கப்பட்டன; அல்லது விட்டிற் பூச்சிகளை மயக்கி தன்னிடம் அழைத்து அழிப்பதற்காகவே விளக்கு வெளிச்சம் காணப்பட்டது என்பதையும் அவர்கள் ஒத்துக்கொள்ளமாட்டார்கள்.

நல்லதற்கும், கெட்டதற்கும் ஒவ்வொன்றின்வசமும் சான்றுகள் உள்ளன. நல்லது செய்வதோ அல்லது கெட்டதைச்செய்யக்கூடியதோ அதையதைக்காப்பாற்றுவதற்கும் அழிப்பதற்கும் அதற்கானவைகள் இருக்கின்றன. ஒவ்வொன்றைச் சூழ்ந்தும் நண்பர்களும் உள்ளார்கள்; எதிரிகளும் இருக்கிறார்கள். அன்பு கொண்டு அணைத்துக்காக்கவும் வெறுப்புக் கொண்டு அழித்து ஒழிக்கவும் ஆன தன்மைகள் ஒவ்வொன்றைச் சூழ்ந்தும் இருக்கின்றன. அழிவுஉண்டாவது போலவே, வளர்ச்சியும் ஏற்படுகிறது. தோல்வியில் வெற்றிபோல, துன்பத்தில் இன்பம்போல! இயற்கை ஒரு கையால் ஆக்குகிறது, இன்னொரு கையால் அழிக்கிறது. இயற்கை ஒரு கையில் வாளையும் இன்னொரு கையில் கேடயத்தையும் தாங்கிக் கொண்டுள்ளது. அழிக்கிறது, அதேவேளையில்காப்பாற்றுகிறது! மரணம் நோக்கி எல்லா வாழ்வும் பயணம்நடத்துகிறது: அதேபோல பிறப்பும் தொடருகிறது! சிக்கனம் அதைப்போல ஊதாரித்தனம்! சாக்கிரதை அதைப்போல பொறுப்பின்மை எங்கெங்கும் நிறைந்து கிடக்கிறது!

உதயம்—அந்தி ஆகிய மனித வாழ்க்கையின் நாடகத்தை நாம் கண்கொண்டு பார்த்து வருகிறோம்: வாழ்வு நாடகம்! தங்கள் பாகங்களை நடித்தபின் நடிகர்கள்மறைந்துவிடுகின்றனர்! வாழ்வு என்ற பெரிய நாடகத்தில் முட்டாள்—முழுமதிபடைத்தோன், கல்லாதவன்—கற்றுத் தேர்ந்தோன், யாவரும் ஒத்திகையின்றி, எந்தப்பாகத்தை நடிக்கப் போகிறோம் என்று கூடத்தெரியாது, நாடகத்தின் குறிக்கோள்—அதன் கட்டங்கள்—இன்னதெனப் புரியாது எல்லோரும் நடிக்கிறோம்! நடிக்கவேண்டியிருக்கிறோம்!

காட்சிகள் மாறுகின்றன; சில நடிகர்கள் மறைந்து விடுகின்றனர், சிலர் புதிதாக வருகின்றனர். மீண்டும் காட்சி மாற்றம். எங்கும் வேடிக்கை நிகழ்ந்து கொண்டேயிருக்கிறது! இதுபற்றித்தெளிவாக்க நாம் முயலுகிறோம். ஆனால் நமது விளக்கங்கள்—விமர்சனங்கள் ஒன்றுக்கொன்று முரண்பாடாகவேயிருக்கின்றன!

ஒரு திரையை விலக்கினால் அதற்குப்பின் இன்னொரு திரை இருக்கவே செய்கிறது. சகலகடல்களைப்போலவே ஒரு துளி தண்ணீர்; சர்வ உலகத்தைப்போலவே ஒரு பிடி மண்; வாழும் சகல உயிர்களைப்போலவே வர்ண இறக்கைகள் கொண்ட ஒரு பூச்சி. எல்லாம் ஆச்சரியமே! ஒரு சிறு முட்டையிலிருந்து நரம்பும் சதையும், ஆசையும் எண்ணமும் எல்லாம் உருவாகிய உயிர் உண்டவதும், ஆச்சரியமே!

மண்ணில் விதைக்கப்பட்ட சிறு விதை மழையில் நனைந்து வெயிலில் காய்ந்து எப்படி ஆகிறது என்ற இரகசியம் எந்த மனிதனுக்கும் தெரியாது! புல்லின் ஒரு பக்கம், சிறிய இலையின் மெல்லிய அசைவு பற்றி விவரிக்கக்கூட முடியாது! அப்படியிருந்தும் சிறிய பொருள் ஒன்றின் ஆச்சரிய நிகழ்ச்சியைக் கண்டு பேச்சு மூச்சற்று நிற்கும் நிலையிலுள்ள ஆத்மார்த்திகவாதிகள், குருமார்கள், பூசாரிகள் உலகைப்பற்றி- உலகம் எப்பொழுது துவங்கியது? எப்பொழுது முடியும்?- தெரிந்தவர்களாக, எல்லாவற்றையும்சிருஷ்டித்த கடவுளைப்பற்றியெல்லாம்- கடவுளின் திட்டம்என்ன, காரியம் என்ன, அவர் என்ன செய்கிறார்- தெரிந்தவர்களாக இருக்கிறார்கள்! அவர்களுக்கு எல்லா ஆச்சரியங்களும் தெரிந்திருக்கிறது; வாழும் மனிதனின் அறிவைத்தொடுபவைகளின் ஆச்சரிய நிகழ்ச்சிகளைத் தவிர்த்து!

ஆனால் யோக்கியமான மனிதர்கள் அறிந்ததாகக் கூறிக்கொள்வ

(தொடர்ச்சி 12ம் பக்கம்)

மந்திரி மாதவமேனன் மது அருந்தினார்?

[✱]

என்ன ஆச்சரியம்! மந்திரி மாதவமேனன் மது அருந்தினாரா! அரசாங்கம் மதுவை ஒழித்துக் கட்டிய இந்நாளிலா? அதுவும் மந்திரியாக இருந்து கொண்டா இந்த அக்கிரமமான காரியத்தைச் செய்தார்? என ஒவ்வொருவரும், திகைப்பும், கொதிப்பும் அடைவீர்கள். இந்த அளவுக்கு மனதைச் செல்லவிட்டு விடாதீர்கள். மந்திரி மது அருந்தவில்லை. மதுவைவிட கடும் போதையை உண்டு பண்ணி, புத்தியைத் தடுமாறச் செய்யும் வேறு எதையோ அருந்தி இருக்கிறார். அதனால் கன்னா, பின்னா என்று உளறிக் கொட்டுகிறார் நாட்டோர் கண்டு எள்ளி நகையாடும் அளவுக்கு. இப்பேர்ப்பட்டவரை மது அருந்தினார் என்று கூறுவது தவறாகாதல்லவா?

அந்த அளவுக்கு அவர் என்ன உளறிக் கொட்டி விட்டார் என்று அறிய நீங்களும் ஆசைப்படுவீர்களல்லவா? படியுங்கள்.

"இந்தக் கருப்புச் சட்டைக்காரர்கள் தமிழைக் காப்பாற்றுவதாகச் சொல்லி சில்லரைக் கலாட்டாக்கள் செய்து வருகிறார்கள். சென்றமாதம் நானும் ஸ்ரீ. பக்தவத்சலமும், கோயில்பட்டிக்குப் போயிருந்த சமயம் சிறு பையன்கள் கருப்புக்கொடி யேந்தி, மந்திரியே திரும்பிப்போஎனக்கோஷமிட்டார்கள். அதில் ஒரு பையன் என்னை அடையாளம் தெரியாமல் கோஷமிட்டான். நான் அந்தப் பையனைக் கூப்பிட்டு, தம்பி! நான் இந்த தேசத்தான், இந்த நாட்டிலே தான் பிறந்தேன, எங்கே போவது என்று கேட்டவுடனே அந்தப் பையன் ஒரேயடியாக அழ ஆரம்பித்து விட்டான். எனக்குக் காசு கொடுத்தார்கள், அதற்காகச் சொன்னேன், இனிமேல் சொல்லவில்லை" என்பதாகப் பேசியுள்ளார் விருதுநகரில். இது 15—10—48-சுதேசமித்திரனில் வெளிவந்திருக்கிறது.

மேலே கண்ட வாசகத்தைப் படித்ததும் திடுக்கிட்டேன் பொறுப்பு வாய்ந்த மந்திரியா இவ்விதம் பேசி இருக்கிறார் என்று! என்னை என்னாலேயே நம்பமுடியவில்லை அந்த வாசகத்தைக் கண்டு, மீண்டும் மீண்டும் வாசித்தேன். மந்திரி மாதவமேனன் தான் பேசி இருக்கிறார். தோழர் மாதவமேனன் கனம் ஆகிவிட்டபடியால் எப்படியும் பேசலாம், மக்கள் நம்பிவிடுவார்கள் என்று எண்ணிவிட்டார் போலும். இல்லாவிட்டால் இவ்விதம் பிதற்றி இருக்கவே மாட்டார்.

திராவிடக் கழகத்தாரைப் பார்த்து, கூலிகள் என்றோ, காலிகள் என்றோ, வீணர்கள் என்றோ சொன்னால் நம்பும் காலமா இது? அதுவும் நெல்லை மாவட்டத் திராவிடக் கழகத் தோழர்களுக்கா இந்தப் பட்டம்? லட்சியமே (திராவிட நாடே) பிறப்புரிமையாகக் கொண்ட நெல்லை மாவட்டத்திலா கூலிப்பட்டாளங்கள்! எஃகுவாய்ந்த உள்ளத்தைக்கொண்ட நெல்லை மாவட்டத்திலா வீணர்கள்? ஒரு கேள்விகேட்டு ராசகோபால் ஆச்சாரி அவர்களைக் கிடுகிடுத்து, விரைத்துப் போகும்படி செய்த நெல்லை மாவட்டத்திலா கனம் மாதவ மேனன் கேள்விக்குக் கண்ணீர்? சோசியலிஸ்ட் கூட்டத்தில் கல்லெறிந்த தேசியத் தோழரைப் பார்த்து ஏ! தேசிய நண்பனே! இக்கூட்டத்தில் கல் எறிந்ததுபோல்; திராவிடக் கழகக் கூட்டமானால் இக்கல்லை எறிந்திருப்பாயா? உன்னால் எறியத்தான் முடியுமா? என பொதுக்கூட்டத்தில் பேசிக்கொண்டிருந்த தோழர் முழக்கமிட்ட கோவில்பட்டியிலா, மந்திரி மாதவமேனன் சொன்ன நிகழ்ச்சி நடந்தது! இல்லை! இல்லை! இல்லவே இல்லை. மந்திரி மாதவமேனன் மதுவினும் கொடிய மற்றொன்றை அருந்தி இவ்விதம் பிதற்றி இருக்கிறார். உண்மையாகவே அன்று நடந்தது என்ன தெரியுமா?

மந்திரி மாதவமேனன் கோயில்பட்டிவந்த அன்று நானும் அங்கு இருந்தேன். இருந்தது மட்டுமல்ல புகைவண்டி நிலையத்திற்கும் சென்றிருந்தேன். சென்றிருந்தது மட்டுமல்ல. மாதவமேனன் பக்கத்திலேயே நின்று கொண்டிருந்தேன். இவ்விதம் மந்திரியாரைப்பார்க்கவேண்டும் என்று நான் ஆசைப்பட்டதின் காரணம், அன்று கோயில்பட்டியில் மந்திரிகளுக்கு கருப்புக்கொடிபிடிக்காது தடுக்க பலத்தபோலீஸ் பாதுகாப்பு இருந்தது, புகைவண்டி நிலையத்திலும் பிரயாணிகளைத்தவிர வேறு எவரையும் அனுமதிக்கவில்லை, இவ்விதம் கட்டுக்காவல் அதிகமாக இருந்ததால் கருப்புக்கொடியை தரிசிக்கும் பாக்கியம் மந்திரியாருக்கு கிடைக்காதோ என மனவருத்தத்துடன் இருந்தேன், உடன் எனது நண்பர் (சின்னதுரை) வந்து, காவல் எவ்வளவு கெடுபிடியாக இருந்தாலும், கருப்புக்கொடி காட்டும் காட்சி நடந்தே தீரும், இல்லாவிட்டால் மந்திரியாரின் நன்றியை மறந்தவர்களாவோம் எனக் கிண்டலாகவும் சொல்லிச் சென்றார். இவ்வளவு சொன்னால்போதாதா; ஓட்டமாய் ஓடினேன் புகைவண்டி நிலையத்தைத் தேடி. தூத்துக்குடிக்கு டிக்கட்டும் எடுத்துக் கொண்டேன், பிளாட்பாரத்திற்குள்ளும் சென்றேன். கைகாட்டியும் என் ஆவலைப்பூர்த்தி செய்ய உடன் இறங்கி விட்டது. பின் வண்டி வருவதும் தூரத்தில் தெரிந்தது. அத்துடன் கருப்புக்கொடிகளும் தெரிந்தது, என் உள்ளமும் குளிர்ந்தது. வண்டி நெருங்க, நெருங்க, கோஷங்களும் கேட்டது. அருகில் வண்டிவந்ததும், மந்திரிகளே திரும்பிப் போங்கள் என்றகோஷம் வானைப் பிளந்தது. பாதுகாவலுக்கு நின்ற போலீஸ் தோழர்கள் எல்லோரும் பேந்தப் பேந்த விழித்தார்கள் இவர்கள் எப்படி இந்த முன்னேற்பாடுகள் செய்தார்கள் என்று. உடன் கனம் மாதவமேனன் தன் சகாக்களுடன், எதையோ பறிகொடுத்தவரைப்போல் வண்டியை விட்டு கீழிறங்கினார், கோஷம் நின்றபாடில்லை. மந்திரியாருக்கும் என்னசெய்வதென்றே தெரியவில்லை. அவருக்கு ஆறுதல் கூறவோ வரவேற்கவோ அப்பொழுது அவர் பக்கத்தில் அவரின் சகபாடிகளையும் காணோம். அந்த நேரம்தான் தன் பக்கத்தில் நின்று கோஷமிட்டசெயராசு என்னும் தோழரைப்பார்த்து, தம்பி என்னை எங்கேபோகச் சொல்லுகிறாய் எனக் கேட்டார். உடன் அத்தோழர், வடநாட்டிற்கு வால் பிடிக்கும் நீங்கள் வடநாட்டிற்குப் போங்கள் எனப்படார் என்று அறைந்தார். மந்திரியாரின் சிவந்தமுகம் கருத்துவிட்டது. அவரது வாழ்க்கைத் துணைவியாரோ தலை குனிந்து விட்டார். எதும் நடைபெறாது என்று எக்காளத்துடன் இருந்த காங்கரஸ் நண்பர்களுக்கு, இத்திடீர் எற்பாடு அதிர்ச்சியைக்கொடுத்து மரக்கட்டைகளைப்போல் நிற்கும்சக்தியைக்கொடுத்துவிட்டது. இதுதெளிய ஏறக்குறைய 10 நிமிடங்கள் ஆகி இருக்கலாம். அதற்கப்பால் போலீஸ் பாதுகாவலுடன் வெளியே அழைத்துச் சென்றார்கள். இதுவே அன்று நடந்த நிகழ்ச்சி. இந்நிகழ்ச்சியையே தற்புகழ்ச்சியாகக் கூறியிருக்கிறார் மந்திரியார். அதுவும் நிகழ்ச்சிநடந்த சுமார் $1\frac{1}{2}$ மாதத்திற்குப்பின். இவ்விதம் மந்திரியார் மறக்கமுடியாத நிகழ்ச்சியானால் எவ்வளவு ஆழப்பதிந்திருக்கும் அவர் மனதில். பாவம் அவருக்கல்லவா தெரியும் அவர் பட்டபாடு! என்ன இருந்தாலும் கோவில்பட்டித் தோழர்கள் இவ்விதம் செய்திருக்கக் கூடாதுதான். ஏனெனில் கணவருக்குக் கிடைக்கும் மரியாதையைக் கண்டு உள்ளம் பூரிப்ப

[தொடர்ச்சி 11ம் பக்கம்]

குடி அரசு

23—10—48 சனிக்கிழமை.

எதிர்பார்க்கின்றோம்!

இந்த வாரத்தில் இங்கு தொடர்ந்தாற்போல் நாலைந்து நாள் நல்ல மழை! மாநாட்டு நாட்களிலும்கூட மழை வந்தாலும் வரலாமென்றுதான் எதிர்பார்க்க வேண்டிய நிலையிலிருக்கிறது. இந்த நிலையில் இலட்சக்கணக்காய்க் கூடும் மக்கள் எவ்வளவு கஷ்ட நஷ்டங்களுக்கு ஆளாக வேண்டியதாயிருக்கும் என்பதைப்பற்றி, மாநாட்டின் வரவேற்புக் குழுவினர் ஒரு புறம் எண்ணினாலும், மற்றொரு புறம் விடாது மாநாட்டை நடத்தியே ஆகவேண்டுமென்று துணிந்து மாநாட்டுத் தேதியை மாற்றாததால், குறித்த நாளிலேயே 19வது திராவிடர் கழகத் தனி மாகாண மாநாடு ஈரோட்டில் இன்று தொடங்கி விட்டது.

போராட்டத்திற்கு மத்தியில் நடைபெறும் இந்த மாநாட்டில், ஸ்பெஷல் மாநாட்டில், எப்படி எப்படி உருவான காரியங்கள் செய்யப்படும்? என்னென்ன தீவிரமான திட்டங்கள் தரப்படும்? என்கிறதான ஒரே எண்ணத்துடன் தான் ஆயிரக்கணக்கான தாய்மார்களும் பதினாயிரக்கணக்கான வீர இளைஞர்களும், மாணவமணிகளும் இங்கு திரண்டு வந்திருக்கிறார்கள்.

அதைப் போலவே, மாநாட்டிற்கு வரவியலாதவர்களாய், அவரவர்கள் ஊரிலேயே இருந்து கொண்டு மாநாட்டைப் பற்றியே எண்ணிக் கொண்டிருக்கும் லட்சக்கணக்கான தோழர்களும் மாநாட்டின் முடிவுகள்—தலைவர்களிடம் கட்டளைகள்—என்னென்ன என்பதைத் தெரிந்து கொள்ளத் துடியாய்த் துடித்துக் கொண்டிருக்கிறார்கள்.

ரத்த ருசிகண்ட பிராணிகளைப் போல அடக்கு முறையின் ருசியைக் கண்ட அதிகார வர்க்கமும், மாநாட்டு நிகழ்ச்சிகளை—முடிவுகளைக் காணப் பரபரப்பாயிருக்கிறார்கள் என்பதை நாம் அறிவோம். ஈவு இரக்கம் சிறிதுமே இல்லாத, காட்டுமிராண்டிக் குணம் படைத்த அதிகாரவர்க்கத்தோடு அதாவது பழி, கொடுமை செய்வதற்குக் கொஞ்சமும் பின்வாங்காத கொடிய அதிகார வர்க்கத்தோடு நாம் போராடவேண்டிய நிலையில் இருக்கிறோம் என்பதைப் பெரியாரவர்கள் நன்றாக எடுத்துக்காட்டி வந்திருக்கிறார்கள். அதேபோல் கஷ்டநஷ்டங்களைக் கண்டு பின் வாங்கும் தன்மையுடைய எவரும் போராட்டத்தில் ஈடுபட வேண்டாம் எனவும் வேண்டிக் கொண்டிருக்கிறார்கள்.

இவ்வளவுக்கும் பிறகு, போராட்டத்திற்கு மத்தியில், மாநாட்டிற்காக லட்சக்கணக்கில் தோழர்களும் தாய்மார்களும் வந்து கூடியிருக்கின்றார்கள் என்றால், அது வெறும் கூடிக்கலையும் மாநாடாக, பேசிமகிழும் மாநாடாக, உண்டுகளிக்கும் மாநாடாக இருக்கவே முடியாது; இருக்கவும் கூடாது. முன்னால் தலையாட்டிவிட்டு "நல்ல பிள்ளையாகக்" காட்டிக்கொண்டு பின்னால் சென்று தகிடுதத்தம் செய்யலாமென்று கருதும் நரிக்குணம் படைத்தோர்க்கோ, சிபார்சால் ஒட்டிக்கொண்டு விட்டோம் இனி நம் வேலையைத் தொடங்கிவிடலாம் என்று கருதுகிற நாசவேலைக்காரர்க்கோ இந்த மாநாட்டில் உண்மையில் வேலையிருக்க முடியாது, பயனுமிருக்கமுடியாது.

இந்தி எதிர்ப்பு அறப்போர் தொடங்குவதற்கு முன்னாலேயே, இது வெறும் மொழிப்போரல்ல! வடநாடு—தென்னாட்டுப்போர்! ஆரியர்—திராவிடக்கலாச் சாரப் போர்! என்று தெளிவுபடுத்தியிருக்கிறோம். அந்த மொழிப்போர் முடிவடைவதற்கு முன்னாலேயே நிறுத்திவைக்கவேண்டிய அவசியத்திற்கு வந்த நாம், மீண்டும் தொடங்குவதற்கு முன்னால், நம்முடைய போர் முனையை எங்கெங்கு, எந்தெந்தத் துறைகளில் ஆரம்பிக்கவேண்டும் என்பதைப் பற்றித்திட்ட வட்டமாக முடிவு கட்டத்தான், கட்டிய முடிவில் வெற்றி காணத்தான் இந்த மாநாடு கூடியிருக்கிறதெனக் கூறலாம்.

மாநாடு முடிந்த சில நாட்களுக்குள் மீண்டும் பள்ளிகளின் முன்பு மறியல் செய்வது என்பதும் மந்திரிகளுக்குக் கருப்புகொடி காட்டுவதென்பதும் நிச்சயமாக நடக்கப் போகிற சங்கதிகள். ஆனால் வடநாடு— தென்னாட்டுப் போர்என்று தொடங்கிய பிறகு, தொடங்க வேண்டிய அவசியத்திற்கு வந்த பிறகு, இந்தி கற்றுக் கொடுக்கும் பள்ளிக்கூடங்களின் முன்னால் மறியல் செய்தால்மட்டும் போதுமா? வடநாட்டு ஆதிக்கத்திற்கு, மடிதட்டும் பணியாளர்களாக இருக்கும் மந்திரிகளுக்கு கருப்புக்கொடி காட்டினால் மட்டும் போதுமா? இந்நாட்டுச் செல்வத்தை — வளத்தை — மக்களின் உழைப்பை-வியாபாரத்தின்பேரால் பகற் கொள்ளையடித்துச் சுரண்டிக் கொண்டிருக்கும் மார்வாடிகளையும், பனியாக்களையும், முல்த்தானிகளையும்-அவர்களின்கொள்ளைத்தொழில் இன்னும் இந்நாட்டில் நடந்து வரும்படியாய் இனியும் எத்தனை நாட்களுக்குத்தான் அனுமதிப்பது? இந்த அக்கிரமத்தைஒழிக்க மானமோ,கவலையோ, அவசியமோ இல்லை யென்று சொல்லி விட்ட மாகாண சர்க்காரைப் பெற்றிருக்கும் நாம், இக்காரியத்தில் உடனடியாக என்ன செய்ய வேண்டும் என்பதை யோசிக்க வேண்டிய கட்டமிது என்று நாம் வற்புறுத்திக் கூறுகிறோம்.

இந்த மாநாடு, ஆளவந்தவர்களின் சுரண்டலுக்கும் அடக்கு முறைப் பாணத்திற்கும் முற்றுப் புள்ளி வைக்கவேண்டிய காரியத்தைத் தீவிரமாகச் சிந்திக்கும் என்று நாம் எதிர்பார்க்கிறோம்.

போர்வாள் நாடகத்திற்குத் தடை! அடுத்தது இரணியன் நாடகத்திற்குத் தடை! இராவண காவியம் பறிமுதல்! இது என்ன மதத் திமிர் படைத்த வஞ்சகாளரின் ஆட்சியா? மத நடுநிலையிலுள்ள சர்க்கார் செய்யும் காரியமா? அரசாங்கத்தின் சார்பாக எந்தக்காரியம் செய்யப்பட்டாலும், வடிகட்டிய காட்டுமிராண்டித்தனமான இந்து மத அடிப்படையில்தான் ஒவ்வொருகாரியமும்செய்யப்பட்டு வருகிறது என்பதை நாம் அடிக்கடி எடுத்துக் காட்டி வந்திருக்கி

றோம். மதச்சேற்றில் நம் மாகாண சர்க்கார் எந்த அளவு விழுந்துவிட்டிருக்கிறது என்பதை, சமீபத்தில் நம் மாகாணப் பிரதமர் இராமாயணக் காலட்சேபக்காரராய் ஆகிவிட்டதே நன்கு விளக்கும். இராவண காவியம் கூடாது என்கிற மத நடு நிலையாளர்கள் முதலில் இராமாயணத்தையல்லவா ஒழிக்கவேண்டும்? இரணியன் நாடகம் கூடாது என்பவர்கள் முதலில் பிரகலாதன் நாடகத்தையல்லவா, சினிமாவையல்லவா ஒழித்துக் கட்டவேண்டும்? இந்நாட்டு மக்களின் இழிவுக்கு அடிப்படையாய் என்னென்ன கதைகள், ஆதாரங்கள் இருக்கிறதோ அவைகளையெல்லாம் மதப் போர்வையைப் போர்த்தி, புராணம் என்றும் சாஸ்திரம் என்றும் சொல்லிப் பாதுகாக்கத் துடிக்கிறார்கள் நம் சர்க்கார்! இந்த நாட்டு மக்களின் விழிப்புக்கு, முன்னேற்றத்திற்குத் தூண்டுகோலாய் இருக்கும் காவியமென்றால் அது கூடாது! நாடகமா, அதுகூடாது! என்று தடை போடுகிறார்கள் நம் சர்க்கார்!

சுயபுத்தியில்லாமல் பார்ப்பனர் அடிமையாயிருந்து கொண்டு செய்யப்படும் இக்காரியங்களையும், இது போன்ற மற்ற காரியங்களையும் இன்னும் எவ்வளவு நாளைக்கு நாம் விட்டுக் கொடுப்பதென்று கேட்கிறோம்.

சிறை செல்லத்தயார்! சிறை செல்லத்தயார்!! என்கிற பேச்சுக்கு இனி அவசியமில்லை! ஆட்சியாளரின் அடக்கு முறைக்குப் பலியாகத்துணிந்துவிட்ட திராவிடத்தோழர்கள், 144-அய் இனிமதிக்கமாட்டார்கள் என்பதை அவர்கள் உரணவேண்டும்! நம் எழுச்சியை, நம் அமைதியான போராட்டத்தை எதற்கெடுத்தாலும் 144 என்கிற இந்தச் சர்க்கார், இந்த 144 அய் கைவிடும்படி செய்ய, இந்தமாநாட்டில் நாம் உறுதி கொள்ள வேண்டும். போடு 144! மீறுகிறோம் அதை! ஜாமீனா கேட்கிறாய்! தருவதற்கில்லை! அபராதம் வேண்டுமா! அடியேனால் ஆகாது! சிறைசெல்லவேண்டுமே! சித்தமாயிருக்கிறேன்! என்கிற போக்கைத்தான், இம் மாநாட்டிற்கு வந்திருக்கும் போர் மறவர்களும், மற்றையத் திராவிடத் தோழர்களும் கைக்கொள்ள வேண்டிய அவசியம்—கட்டாயம் வந்துவிட்டது.

இன்றைய நிலைமையில் நம்முடைய நோக்கம், அரசியலில் சட்டசபைப் பிரவேசம் அல்ல என்பதை நாம் அடிக்கடி எடுத்துக் கூறி வந்திருக்கின்றோம். வயது வந்தோருக்கெல்லாம் வாக்குரிமை என்பது, அரைக்கிணற்றைத் தாண்டிய நிலையில் இருக்கிறது என்பது ஒரு பக்கமிருந்தாலும், நாட்டு மக்களில் பெரும்பாலோர் அரசியல் தத்துவங்களை யுணர்ந்து கொள்ள முடியாத நிலையில், நம்முடைய இந்த நோக்கத்தை மாற்றிக் கொள்ளவேண்டிய அவசியம் இன்று எற்பட்டு விடவில்லையென்றே நாம் எண்ணுகிறோம். அதற்கு வாய்ப்பும் தகுதியும் ஏற்படும் போது சிந்திக்கவேண்டிய காரியமாகும்.

ஆக்கவேலையில் நேரடியாய் ஈடுபட்டுச் செய்ய, அதிகாரத்தைக் கைப்பற்றும் சட்டசபைப் பிரவேசம் ஒத்திவைக்கப்படவேண்டியதென்றால், சட்டசபைக்கு வெளியிலேயிருந்து, சட்டசபையிலுள்ளவர்களையும் செய்யும்படியாய்த் தூண்டத்தக்க நம்முடைய சமுதாயச் செயல்கள் என்ன? அதற்கான புரட்சிகரமான திட்டங்கள் என்ன? இவைகள் இந்த மாநாட்டில் நன்கு விளக்கப்பட்டு, தொண்டர்களாலும் கைக்கொள்ளப்பட்டு, நாட்டு மக்களுக்கு நல்ல பயனை உண்டாக்கவேண்டும் என்றும் நாம் ஆசைப்படுகிறோம்.

எப்படியும் பெரியார் அவர்களின் தலைநகரில்கூடும் இந்த 19-வது மாநாடு, பெரியாரவர்களின் வாழ்நாளிலேயே அவர்களின் லட்சியமாகிய இன்பத் திராவிடத்தைக்காண, வழிவகுத்து விடுமென உறுதியாய் எதிர்பார்க்கின்றோம்.

★

வாக்காளர் பதிவா? வஞ்சக வலையா?

—()●()—

மதவாதிகளும் பணமூட்டைகளும் நிரம்பி அவர்களின் பூரண ஆதிக்கத்திற்கு வந்த காங்கரஸின் கட்டளைப்படி, அரசியல் நிர்ணய சபைக்கு, சட்டசபை மெம்பர்கள் என்பவர்கள் ஆட்களை நியமித்தார்கள். அவ்வாறு நியமிக்கப்பட்டவர்களுக்கு நம் மாகாணத்தைப் பொறுத்தவரையிலும் எந்த விதமான யோக்கியதையோ, தகுதியோ இல்லை யென்பதோடு, நியமித்த சட்டசபை மெம்பர்களுக்கும் அதற்கான தகுதியில்லை என்பதை நாம் அடிக்கடி எடுத்துக் கூறிவந்திருக்கிறோம். அதற்கான காரணங்களையும் விளக்கி வந்திருக்கிறோம்.

பாடுபடும் பாட்டாளிகளுக்குக் கொஞ்சமும் சம்பந்தமில்லாத வகையில், நியமிக்கப்பட்ட அரசியல் நிர்ணயசபையினர், ஒரு திட்டத்தை வகுத்து "இது தான் இனி இந்த நாட்டின் தலைவிதி" என்று கூறியிருக்கிறார்கள்.

அந்தத் திட்டத்தில், படித்தவர்களுக்கும் பணக்காரர்களுக்கு மட்டுமே 'வோட்' உரிமை என்று இப்போது இருப்பதை மாற்றி, "21-வயதுவந்த எல்லோருக்குமே வாக்குரிமையுண்டு" என்று கண்டிருக்கும் பகுதி, இந்நாட்டு அரசியல் தலைவர்கள் அனைவராலும் நெடுங்காலமாக வற்புறுத்தப்பட்டு வந்ததாகும்.

வயது வந்தவர்களுக்கெல்லாம் வாக்குரிமை என்ற பகுதியை அமுலாக்கும் தோரணையில், முதல் முதல் நம் சென்னைமாகாண சர்க்கார் இந்த மாதம் 8, 9-ம் நாட்களில் மாகாண முழுதும் பதிவு செய்யும் வேலையை ஆரம்பித்தனர். பலர் பதிவாகவில்லை என்று பின்னும் ஒரு நாளைக்கூட்டி 10-ம்நாளும் சென்னையில் பதிவுசெய்யும் வேலை நடக்கும் என்றார்கள். மேலும் 23-ம்நாள் வரை, விடுபட்டுப்போனவர்கள், அதிகாரிகள் முன்னால் வந்து விண்ணப்பித்துக்கொண்டு பதிவுசெய்து கொள்ளலாம் எனவும் கூறினார்கள்.

இன்றுவரை பதிவு செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை, இவ்வளவு என்கிற புள்ளி விபரம் இன்னும் வெளியாகவில்லை யென்றாலும் 100-க்கு 40-சத விகிதம் மீறினால் 50-சத விகிதத்திற்கு மேல் ஆகியிருக்க முடியாது என்பதை 19-உ சட்டசபையில் நடந்திருக்கும் விவாதங்களிலிருந்து நாம் யூகிக்கலாம். யூகம் தவறாகவும் இருக்கலாம். ஆனால் பெரும்பாலோர் பதிவு செய்யப்படவில்லை என்பது நிச்சயம்.

ஜனநாயகத்திற்கு அஸ்திவாரமான, வயதுவந்தோர் வாக்குரிமை என்பது, இப்படி அரை குறையாகச் செய்யப்படலாமா? அஸ்திவாரமே அரை குறையென்றால் அதன் மீது கட்டப்படும் கட்டிடம் கட்டிடமாக இருக்குமா? இந்தக் கேள்வி ஜனநாயக விரும்பிகள் எவருக்கும் தோன்றும். ஆனால் நம் மாகாண சர்க்காருக்கு அந்தக் கவலை இல்லவே இல்லை!

முதலாவது, வாக்காளர்களைப் பதிவு செய்யும் வேலையை இவ்வளவு அவசரம் அவசரமாக ஆரம்பித்து, அவசரம் அவசரமாக ஏன் முடிக்க வேண்டும்?

இரண்டாவது, மாகாணவாசிகளில் 100க்கு 85 பேர் எழுதப் படிக்கத் தெரியாதவர்கள் என்பதைச் சொல்லுகிற சர்க்கார், கிராமப்புறங்களில் பதிவு செய்துகொள்ளவேண்டுமென யாரையும் கட்டாயப் படுத்த வேண்டியதில்லை என்று, பதிவு செய்பவர்களுக்கு அறிவிக்கப்பட்டதாக வேறுசொல்லப்படுகிறது.

வயது வந்தவர்கள் அத்தனை பேரும் ஒருவர் பாக்கியில்லாமல் பதிவு செய்யப்படவேண்டுமென்கிற நோக்கமும், அதற்கான செயலுமிருந்தால் கூட பலர் விடுபட்டுப் போக நேரிடும். அப்படியிருக்க, "அத்தனைபேருக்கும் வாக்குரிமை என்கிற பெயரிருக்க வேண்டும் ஆனால் அத்தனை பேரும் பதிவு செய்து கொள்ளக்கூடாது" என்பதான நோக்கம் சர்க்காருக்கிருந்தால் இது என்ன பித்தலாட்டம் என்று நாம் கேட்கிறோம்.

சர்க்காருக்கு, அனைவரும் பதிவாக வேண்டும் என்கிற நோக்கம் ஆரம்பத்திலிருந்தே இல்லை என்பதை சட்டசபையில கேட்கப்பட்ட கேள்வியும் பதிலுமே வெளிப்படுத்தும்.

கே:— திருநெல்வேலி ஜில்லாவில் 50 சத விகித ஜனங்கள் பதிவு செய்யப்படவில்லை என்பது மந்திரிக்குத் தெரியுமா?

பதில்:— இந்தியர்களின் மரண விகிதத்தை யோசிக்கும் பட்சத்தில் 50 சத விகிதம் குறைந்தது அல்ல.

கே:— வோட் பதிவு திருப்திகரமாய் நடந்திருப்பதாகமந்திரிகூறுகிறார். மொத்தம் எத்தனை சத விகிதம்பதிவு செய்யப்பட்டிருக்கும்?

பதி:— அது எதிர்பார்த்ததற்கு மீறிப் போயிருக்கிறது.

சர்க்காரின் சார்பாகச் சொல்லப்பட்டிருக்கும் பதில்கள், அடடா! எவ்வளவு நேர்மையாகவும் யோக்கியதையாகவும் காணப்படுகின்றன. பாலிய வயதிலேயே இந்தியர்கள் இறந்து விடுகிறார்கள். ஆதலால் அவர்களில் 50 சதவிகிதம் பதிவு செய்யப்பட்டிருப்பதே மிக அதிகம் என்கிறது சர்க்கார். மேலும் இந்த 50 சதவிகிதத்தை "சர்க்கார் எதிர்பார்த்ததற்கு மீறிப்போயிருக்கிறது" என்று வேறு கூறுகிறது. ஆகவே பாதிக்குப் பாதிப்பேர்கூட பதிவு செய்யப்படவேண்டும் என்கிற நோக்கம், சர்க்காருக்கு ஆரம்பத்திலிருந்தே இல்லை என்பது இதிலிருந்து விளங்குகிறதல்லவா?

மேலும் 8, 9-ம் நாட்களில் எல்லோரும் வீட்டிலிருக்கவேண்டும் என்று, மற்றவர்களுக்குப் புத்தி சொன்ன சர்க்கார் மந்திரிகளே, அந்த நாட்களில் பதிவு செய்யப்படவில்லை என்று சர்க்கார்கூறும் போது, இந்தக்காரியத்தில் சர்க்காருக்கு-முக்கியமாக மந்திரிகளுக்கு எவ்வளவு கவலையும் பொறுப்பும் இருந்திருக்கிறது என்பதை விளக்குகிறதல்லவா?

பதிவு செய்யப்பட்டிருக்கிற முறையை எண்ணிப் பார்த்தால், "பதிவு செய்யப்பட்டவர்களில் பெரும்பாலோர் நாளைக்குகாங்கரசுக்கே ஓட் அளிப்பவர்களாயிருக்க வேண்டும்" என்கிற திட்டத்தின் மீது தான், இந்த நாடகம் நடத்தப்பட்டிருக்கிறது என்று துணிந்து கூறலாம்.

ஏன் அப்படிக் கூறுகிறோமென்றால் ஏழை மக்கள்—பாட்டாளி மக்கள்—கூலி வேலை செய்வோர்-குடிசைகளில் வாழ்பவர்கள் பதிவு செய்யப்படவில்லை. முஸ்லிம் பெண்கள் பதிவு செய்யப்படவில்லை. கடைகளிலுள்ள சிப்பந்திகள், தொழிலாளர்கள் பதிவு செய்யப்படவில்லை.......இவை, சட்டசபையில், பலர் பதிவாகவில்லை என்பதற்கு மெம்பர்களால் எடுத்துக்காட்டப்பட்டவைகள்.

பதிவு செய்யும் பார்ப்பனர்கள் பலர், கட்டுப்பாடாகத் திராவிடர்கள் என்று கூறியவர்களைப் பதிவு செய்து கொள்ளவில்லை. பதிவு வேலையில் ஈடுபட்ட பலர் வேலை மிகுதியால், நேரமின்மையால் பலரையும் பதிவு செய்ய முயற்சிக்கவில்லை. ஆண்கள் வெளிச்சென்றிருந்த நேரத்தில் வீட்டிலிருந்த பெண்களும்கூட, என்னமோ, ஏதோ என்று பயந்து கொண்டு பெயர்களைச் சொல்லவோ, பதிவு செய்து கொள்ளவோ முன்வரவில்லை. வீட்டிலிருந்த ஆண்கள் கூட, "ஓட் ஓட்" என்று சொல்லி ஓட்டுப் போட்டுத்தானே நாங்கள் ஓடெடுக்கவேண்டிய நிலையிலிருக்கிறது. அந்தச் சனியனே வேண்டாம் என்று பதிவுசெய்துகொள்ள மறுத்திருக்கிறார்கள்.......இவைகளெல்லாம் பெரும்பாலும் மாகாணத்தின் ஒவ்வொரு ஊரிலும் நடந்திருக்கும் சம்பவங்களாகும்.

இவைகளையெல்லாம் சர்க்கார் அறியவில்லையென்றோ, தெரிந்தே இந்த முறையில் பதிவு வேலையைத்தொடங்கவில்லை யென்றோ கூறிவிட முடியாது. எப்படியேனும் ஒவ்வொருநாளும் உழைத்தே வாழவேண்டிய நடுத்தர மக்களில் பெரும்பாலோருக்கு 8-உ வெள்ளிக்கிழமையும் 9-உ சனிக்கிழமையும் வீட்டிலேயே இருப்பதற்குரிய நாட்களல்ல. 23-உ வரை பதிவு செய்து கொள்ளலாம் என்பதையே பலர் அறியமாட்டார்கள். அறிந்திருக்கும் சிலரும், அதற்கான முயற்சி எடுத்து, பதிவு செய்து கொண்டுவிடவேண்டும் என்கிற அவசியத்தை உணர்ந்தவர்களல்ல. உணர்த்தவேண்டிய சர்க்காரும் அதை உணர்த்தவில்லை. இவைகளைச் சர்க்காரும் நன்றாய்த் தெரிந்தவர்கள் தான்.

ஆகவேதான், கார்ப்பரேஷனும் முனிசிபாலிட்டிகளும் கற்பித்த பாடங்களை மறக்காதவர்களாய், "வயது வந்தோருக்கு வாக்குரிமை" என்று தம்பட்டம் அடித்து, பார்ப்பனர்களும், பணக்காரர்களும், பணக்காரர்கள் தயவால் வாழவேண்டியவர்களாயும், அவர்கள்சொல்லை மீறாதவர்களாயுமுள்ள மற்றையோரும் பெரும்பான்மையோராய் இருக்கட்டும்என்று திட்டமிட்டு, எப்படியும் அடுத்த தேர்தலிலும் தாங்களே பதவிக்கு வந்து விடவேண்டும் என்று துணிந்து, அதற்காகச் செய்யப்பட்ட பதிவு நாடகமாகவேயிருக்கிறது என்று நாம் வற்புறுத்திக் கூறுகிறோம்.

இதை மறுக்க எந்த மந்திரிகளுக்காவது தைரியமாவது நாணயமாவது உண்டா? உண்டென்றால் அந்தக் கண்ணியவான் வயதுவந்த அனைவரும் வாக்காளர்களாகப் பதிவு செய்யப்பட முயற்சிக்கட்டும்! அதற்கேற்ற நாளாகவும், நேரமாகவும் வகுக்கட்டும்! பதிவு செய்து கொள்ளாதோர், பலமாகத் தண்டிக்கப்படுவர் என அறிவிக்கட்டும்! பதிவு செய்வோர் தொகையை இன்னும் இருமடங்கு ஆகப்பெருக்கட்டும்!

உண்மையாகவே கேட்கிறோம். அத்தனைபேரும் பதிவு செய்யப்பட வேண்டும் என்கிற நோக்கம் இந்த சர்க்காருக்கு இருக்குமானால், அது நிறைவேற முடியாது என்று கூறி விடமுடியுமா? இதை நிறைவேற்றத் திறமை யில்லாத சர்க்கார், தன்னைச்சர்க்கார்என்று

தான் சொல்லிக்கொள்ளமுடியுமா? வாக்காளர்களைப் பதிவு செய்யும் போதே வஞ்சக வலையையும் ஏன் வீச வேண்டும்?

★

இல வீரராசன் தந்தை இயற்கை எய்தினார்.

★

கல்வார்பட்டி. இல. வீ. இலட்சுமணன் அவர்கள் 13—10—48 காலை 6-மணிக்குக் காலமானார். தோழர்கள் கூட்டத்துடன் மாலை 6-மணிக்கு தகனம் செய்யப்பட்டது. அன்னார் சாகும்வரை பெரியார் படிப்பகத்தைஉறைவிடமாகக் கொண்டிருந்தார்.

★

சீர்திருத்தத் திருமணம்.

-(●)-

27—9—48 மாலை 5—30மணிக்கு திருச்சி தோழர்கள் வீரமணி—செல்வராஜம்மாள் வாழ்க்கை ஒப்பந்தம் வழக்கறிஞர் வேதாசலமவர்கள் தலைமையில் நடைபெற்றது. அயல் நாட்டிலிருந்தும் உள்நாட்டிலிருந்தும் ஏராளமான வாழ்த்துக்கள் வந்து குவிந்தன. தோழர்கள் குஞ்சம்மாள், முத்துசாமி, மாணிக்கம், சிவலிங்கம், ரெங்கசாமி, இளங்கோவன், மோகன் சுப்பிரமணியம் முதலியோர் சீர்திருத்தத்திருமணம் என்பது குறித்துப் பேசினார்கள். மணமகன் தந்தையார் டாக்டர் க. பிச்சைமுத்து அவர்கள் நன்றி கூற இரவு 8 மணிக்கு இனிதே முடிவுற்றது.

இதன் நினைவாகக் குடி அரசுக்கு அனுப்பிய ரூ 1ம் வரப் பெற்றோம்

[ஆ—ர்]

[7ம் பக்கத் தொடர்ச்சி]

படைய, மந்திரியாரின் வாழ்க்கைத் துணைவியும்வந்திருக்கிறார்பாருங்கள்! அதற்காகத்தான்.

மக்களின் மனோ நிலை கருப்புக் கொடி பிடிப்பதிலிருந்துமாறி அமைச்சரை அவர் தம்பீடத்திலிருந்து கீழே பிடித்துத் தள்ளும் அளவுக்கு மனோநிலை மாறினாலும், மந்திரியாரின் மனோநிலைமாறாது. காரணம், பதவி மோகம், பணவெறி. இந்த வெறி இருக்கும்வரைக்கும், நடந்தவைகளை திரித்துக் கூறுவது மட்டுமல்ல, வேறு எதையும்கூட செய்வர்

கோவில்பட்டித்தோழர்கள் பணம் கொடுத்தார்கள், கூச்சல்போட்டேன் என்று சொன்னதைக் கேட்டதும்,கண்ணீர் வடித்ததை கனம் மாதவமேனன் பார்த்ததும் உண்மையாக இருக்குமேயானால்; பொது மக்கள் கூடியுள்ள ஓர் பொதுக் கூட்டத்திலே கோவில்பட்டி தோழர்களைக் கொண்டு வந்து நிறுத்துகிறேன், அம்மேடையில் கனம் மாதவமேனன் தோன்றி தாம் சொல்வதை நிரூபிக்க முடியுமா? முடியுமானால் கூட்டத்தைக் கூட்டட்டுமா? நாளைக் குறிப்பிட்டு அழைப்பு அனுப்பட்டுமா? ஆனால் ஒன்று, எங்கு வரவழைத்து மீண்டும் கருப்புக்கொடி பிடிக்கப் பொகிறார்களோ! என அஞ்சினாலும் அஞ்சலாம். இந்த அழைப்புக்கு கனம் மாதவமேனன் ஒப்புக்கொள்வாரேயானால் அவரைபாண்டு வாத்தியங்களுடன் ஊர்வலமாக அழைத்துச்செல்லத் தயாராய் இருக்கிறோம். தயார்தானா?

கனம் மந்திரியார் கூறியது போல் திராவிடர்கழகத்தில், கூலிக்குமாரடிக்கும் கூலிப்பட்டாளங்களோ, கேள்வியைக்கண்டதும் கண்ணீர் வடிக்கும் தொடை நடுங்கிகளோ கிடையாது! திராவிடர்கழகத்தில் ஈடுபட்டு தியாகம் செய்தால் திராவிடர்கழக அரசில் 5 ஏக்கர் நிலத்திற்கு தியாகி மனு விண்ணப்பிக்கலாம் எனக்கருதும் ஆகஸ்டு தியாகிகள் திராவிடர்கழகத்தில் கிடையாது! அர்த்த ராத்திரியில் ஊருக்கு வெளியே இருக்கும் தந்திக்கம்பிகளை அறுக்கும் ஆண்மையாளர்கள் திராவிடர் கழகத்தில் கிடையாது! ஆள் நடமாடாத இடத்திலே, ஒருவர் முகம் இன்னொருவருக்குத் தெரியாத சந்தர்ப்பத்தில் போய் தண்டவாளங்களைப் பெயர்த்து எடுக்கும் பெரும் பலம் படைத்த வீரர்கள் திராவிடர் கழகத்தில் கிடையாது! மூலை முடுக்குகளிலே உள்ள தபால் பெட்டிகளைக் கொளுத்தும் சூராதி சூரர்கள் திராவிடர் கழகத்திலே கிடையாது! இனிப்பைக் கொடுத்து ஏய்த்து ஆள்களைத் திரட்டும் தலைவரும் திராவிடர் கழகத்தில் கிடையாது! ஆசை வார்த்தைகளைச் சொல்லிப் போர் முனைக்கு அழைத்துச் செல்லும் தளபதிகள் திராவிடர் கழகத்தில் கிடையாது! போர்! போர்!! தன்மானப் போர்!!! விடுதலைப் போர்!. புறப்படுகிறாயா? போரில் ஈடுபடு, போர்முனைக்குப் புறப்படு. களத்திலே போரிடு! கூலி என்ன? என்று கேட்டுவிடாதே! குடும்பத்திற்கு வழி என்ன என்றும் கேட்டுவிடாதே! போர் முடிந்த பின்பும் கூட ஏதாவது உண்டா என்று கூடக்கேட்டுவிடாதே! இதற்கெல்லாம் இஷ்டப்பட்டால் போரில் ஈடுபடு! வீட்டைவிட்டுக் கிளம்பும் பொழுது மரணசாசனம் எழுதி வைத்துவிட்டு வந்துவிடு என்று கூறிடும் தலைவரே எம்மிடம் உண்டு. அதன்படியே கட்டளையும் பிறப்பித்து விட்டார். அதற்கு உடன்பட்டே ஆயிரம் ஆயிரம் வாலிபர்கள் இன்று பெரியாரைச் சுற்றிக்கொண்டு திரிகிறோம் என்பதை மந்திரியார் உணரட்டும்! அவர் எப்படி உணரப் போகிறார். அவருக்குத்தான் ஒரு நிலை இல்லையே!

"கே. வி. கே. சாமி"

●

கலகலக்கும்!

●

அவசியம் ஏற்பட்டபோது திருமயிலையும், திருவல்லிக்கேணியும் ஒன்று கூடிக்கொள்வது ரொம்ப சகஜம். ஆரியத்திற்கு ஆபத்தென்றால் ஆச்சாரியாரும், சத்திய மூர்த்தியும் ஒன்று சேர்ந்து கொள்வார்கள்! அரசாங்க எதிரிகளான அவர்களோடு, அரசாங்கத்தின் கையாட்களான அல்லாடி கிருஷ்ணசாமி அய்யரும், சர். சி. பி. ராமசாமி அய்யரும் கூட ஒன்று கூடிக்கொள்வார்கள். ஆனால், என்னதான் அவசியம் ஏற்பட்டபோதிலும் இரு கட்சிகளில் உள்ள தமிழர்கள் ஒரு பொதுக்காரியத்தில் மனமொப்பி கூடி வேலைசெய்ய மாட்டார்கள். அப்படிப்பட்ட பரிதாபத்துக்குரிய நிலை, இந் நாட்டில் பார்ப்பனீயம் தங்குதடையின்றி வளர்ந்தோங்க மூலகாரணமாயிருந்த நிலை, இன்றோடு மாய்ந்து போனது. இனி மயிலையும், திருவல்லிக்கேணியும் கூட கலகலக்கும்.

சி என். ஏ.

எதிர்பாருங்கள்!

காங்கயம் பட்டக்காரர் உயர்நிலைப்பள்ளி
அர்ச்சுனன் உணவு விடுதி அமைப்பு உதவி நிதிக்காக
அறிஞர் C. N. A. எழுதிய

"சந்திரமோஹன்"

நாடகம் ஈரோடு ஸ்டார் டாக்கீஸில் அடுத்த மாத மத்தியில் நடைபெறும்.

சி. என். ஏ. அவர்களும், மற்றும் பலரும் நடிக்கிறார்கள்.

(6ம் பக்கத் தொடர்ச்சி)

தில்லை. அவர்கள் நேர்மையும் பொறுப்பும் உடையவர்கள். அவர்கள் உண்மையைவிரும்புகிறார்கள்; நேசிக்கிறார்கள். அத்துடன் தங்கள் அறியாமையை ஒத்துக் கொண்டு ''எங்களுக்குத்தெரியாது' என்றும் தெரிவித்துவிடுகின்றனர்.

எனவே ஏன் நாம் நமதுஅறியாமையை வணங்க வேண்டும்? நமக்குத்தெரியாததற்கு நாம் ஏன் முழங்காலிட்டு தண்டனிடவேண்டும்? இருக்கிறதாகக் கூறப்படுகிற சந்தேகமான ஒன்றை நாம், நாமே ஏன் மண்டியிட்டுப் பணிய வேண்டும்?

கடவுள் இருக்கிறார் என்றால் அவர்நல்லவர், நமக்காகக்கவலைப்படுபவர் என்பதை நாம் எப்படித் தெரிந்து கொள்ள முடியும்?

தங்கள் கடவுள் 'கடைசி நிலைக்கு அப்பால் கடந்து விட்டதாக கிருஸ்துவர் சொல்லுகின்றனர்; அதோடு அவர் எப்பொழுதும் அங்கேயே இருக்கிறார், இருப்பார்; அழிவற்றவர், நல்லவர் என்பதாகவும் சொல்லுகின்றனர். தான் கடவுளாகயிருப்பதை அவர் தவிர்த்துக் கொள்ள முடிந்ததா? தான் நல்லவராகயிருப்பதைத்தான் அவர் தவிர்த்துக் கொண்டாரா? தன்னுடைய விருப்பம், விழைவு ஆகியவைகளைச் சாராது அவர் நல்லவராக இருந்தாரா?

அவரே எல்லாவற்றிற்கும் காரணம். அவர் எப்படியிருக்கிறாரோ, இருந்தாரோ அதுபோலவே என்றும் மாறாதுஇருப்பார். தன், தன்மையை முன்னேறச் செய்வது அல்லது வளர்ப்பது பற்றி அவர் செய்வதற்கு ஒன்றும் இல்லை; தன் மூளையை முன்னேறச் செய்வது பற்றிக்கூட ஈடுபடுவதற்கு அவருக்கு ஒன்றும்இல்லை! அவர் எப்படியிருந்தாரோ அப்படியே இருக்கிறார். அவரிடம் எந்த விதமான வளர்ச்சியும், முன்னேற்றமும் இல்லை! அவர் எப்படி இருக்கிறாரோ அப்படியே இனியும் இருப்பார்: அதாவது எந்தவித மாறுதலும் இருக்காது. பின் ஏன் நாம் அவரைப் போற்ற வேண்டும்? முன்னிருந்த நிலைமையிலிருந்தும் தற்போது இருக்கும் நிலையிலிருந்தும் அவர் எந்த விதத்திலும் மாறியிருக்க முடியாது என்று இருக்கும்பொழுது நாம் ஏன் அவர் மாறுதலற்றவர் என்று போற்றவேண்டும்?

அதோடு தங்கள் கடவுள் எந்த விதமான கெடுதலும் செய்யாது என்றும் அவர்கள் (கிருஸ்துவர்) கூறுகின்றனர்.

ஏன் கடவுள் பிரார்த்தனையைக் கோருகிறார்? அவர் இருந்தது போலவே இருக்கிறார். அவர் எப்பொழுதும் எதுவும் அறிந்து கொண்டவரில்லை; எதிலும் பொறுப்பு கொண்டதில்லை; ஆசையைக் கடந்தவர், ஆபத்து நம்பிக்கை ஆகியவைகளைத் தொடாதவர், எப்பொழுதும் விருப்பமற்றவர். அப்படியானால் பின் ஏன் அவர் பிரார்த்தனையைக் கோருகிறார்?

இந்தக் கடவுள் இருக்கிறார் என்பது யாருக்காவது தெரியுமா? அவர் எப்பொழுதாவது பிரார்த்தனைகளைக் காது கொடுத்துக் கேட்டு, பதில் கூறியிருக்கிறாரா? உலகை அவரே ஆட்டிவைக்கிறார் என்பது தெரியுமா? மனிதர்களின் விவகாரங்களில் தலையிட்டு, நல்லோரைக் காப்பாற்றுகிறார், தீயோரைத் தண்டிக்கிறார் என்பதுதான் தெரியுமா? மனித சரித்திரத்தில் இதற்கான சான்றுகள் உண்டா? கடவுளே உலகை ஆளுகிறார் என்றால், நற்செய்கைகளுக்காக அவரை மதிக்கவும் அதேபோல கெட்டவைகளுக்காக அவர் மீது குற்றம் சுமத்தவும் ஏன் நாம் கூடாது? இந்தக் கடவுள் பற்றி நாம் நிரப்புக் கொள்ள வேண்டுமென்றால் நாம் நல்லதை நல்லது என்று கூறுவது போலவே கெட்டதையும் நல்லது என்று கூறவேண்டும் போலும்!

'யாவும் அவன் செயல் என்றால்' அவனது செயல்களில் நாம் எந்தவித வேறுபாடுகளையும் கற்பிக்கக் கூடாது. அறுவடைக்காகவும்-சூரிய வெளிச்சத்திற்காகவும் நாம் நம் நன்றியைத் தெரிவிக்கிறோமென்றால், அதைப்போல பிளேக், பஞ்சம் ஆகியவைகள் பற்றியும், நம் நன்றியைத் தெரிவிக்க வேண்டும்.

சுதந்தரம் பெறுவதற்காக நாம் 'அவனை'க் கும்பிடுகிறோமென்றால், அடிமைப்பட்டுக்கிடப்பவனும்விலங்கு பூட்டப்பட்ட தனது கரங்களை உயர்த்தி,பாடுபட்டும்பயனின்றி வாழும் தன் நிலைமைக்காக 'அவனை'க்கும்பிடவேண்டும்! நாம் வெற்றிக்காக அவனை வணங்கினால், தோல்விக்காகவும் அதைப்போல அவனை வணங்கவேண்டும்!

உண்மையானது என்ன வென்றால் நல்லஆவிகள்-கெட்டஆவிகள் அதாவது கடவுள்கள், பேய்பிசாசுகள் நம் அறிவுக்கு கட்டுப்படாததாக, நம் சிந்தனையில் காணமுடியாததாக, நமது கற்பனைகளையெல்லாம் தோற்கடிக்கச் செய்வதாக இருக்கின்றனஎன்பதேயாகும்!

மனிதன் சிந்திக்கவேண்டும்; தனது ஐம்புலன் கொண்டும் ஆராய வேண்டும்; எதையும்காரணங் கண்டு நம்பவேண்டும். சிந்திக்காதவன் மனிதனல்ல. அவன் தனக்கே துரோகம் செய்து கொள்பவன். சிந்திக்கவே அஞ்சுபவன் அறியாமையின், மூடநம்பிக்கையின் அடிமையே!

புதிய வெளியீடு.

தயார்! விற்பனைக்கு தயார்!!

அறிஞர் அவர்கள் எழுதிய வடநாட்டுச் சுரண்டலை விளக்கிக்காட்டும்

பணத்தோட்டம்.

விலை ரூ. 1—0—0.

தோழர் இரா. நெடுஞ்செழியன் M. A. அவர்கள் எழுதிய மொழிப்பிரச்சினையை விளக்கிக்காட்டும்

மொழிப்போராட்டம்.

விலை ரூ. 1—0—0.

திராவிடப்பண்ணை,

தெப்பக்குளம், P. O., திருச்சி.

[4ம் பக்கத் தொடர்ச்சி]

துரோகி...''

''இருக்கலாம்... அதற்காகத் தகுந்த காரணமின்றி...''

''காரணம்! அவன் பேச்சு ஒன்று போதாதா...?''

''அதை மட்டும் கொண்டு...வேண்டுமானால் சிறைப்படுத்தலாமேதவிர...''

''சுடமுடியாது என்கிறீர்!...ஏன்? அவன் உமது தம்பி என்பதனாலா?...''

''தகப்பன் என்றாலும் தயங்கமாட்டேன் அய்யா...''

அவர் கேலியாகச் சிரித்தார். ''நல்ல பிழைப்பு! தம்பி நூறுதலைகளின் தலைவன்... அண்ணனுக்குப் போலீஸில் உத்தியோகம்... உம்மை நம்பிப்பயனில்லை...'' என்று நொடிப் பொழுதில் மறைத்து வைத்திருந்த தன் கைத்துப்பாக்கியை எடுத்தார்.

அதிகாரி அதனைத் தடுப்பதற்குச் சித்தமாவதற்குள், ஆலை அதிபரின் கைத்திறன் புகைச்சுருளைக் கிளப்பி விட்டது. அதனூடே சீறிப்புறப்பட்ட குண்டு, குமாரின் இருதயத்தோடு உறவாடியது.

கதிரேசரின் அத்து மீறிய செயலுக்குத் தண்டனையாக, அவரைக் கைது செய்வதன் மூலம், தன் தம்பியைக் கொன்றதற்குப் பழிதீர்த்திருக்க முடியும் அதிகாரியால். ஆனால் அதற்கு மேல் நின்ற கடமை உணர்ச்சி, களத்தில் போலீஸ் அணிவகுப்பைக் கதிரேசரின் காப்புக்குக் கொண்டு வந்து, அவரை அவ்விடத்தைவிட்டு அப்புறம் செல்லத்தயாராக்கி விட்டது.

தொழிலாளக்கடல் கொந்தளித்தது. ஆங்காரம் கலந்தசோக இரைச்சல் அலைமோதி எழுந்து, வான மண்டலத்தை நிரப்பியது. புரட்சி வீரனின் பொலிவிழந்த கோலம், அவர்களின் பகுத்தறிவையே பறித்து காட்டுப்புலிகளாக மாற்றிக்கொண்டிருந்தது.

கதிரேசரின் மோட்டார் கிளம்பும் ஒலிகேட்டதும், அவர்களுடைய ஆத்திரக்கரை உடைத்துக் கொண்டது. அது மாத்திரம் தடைபடாதிருக்குமானால், கதிரேசரின் காவற்படை செயலிழந்து, அவருடைய உடல் துவம்சமாக்கப்படுவதோடு, ஆலையும் நொறுக்கி எறியப்பட்டிருக்கும்.

ஆனால் அவ்வேளை, குண்டு பாய்ந்த நெஞ்சத்தைப் பிடித்துக் கொண்டு, கொப்பளித்து எழும் இரத்தப்பெருக்கைச் சட்டை செய்யாமல், தடுமாறி எழுந்து நின்றான் அவன்—குமார்!

ஆயிரம் ஆயிரம் உருவங்கள் அவனின உதட்டசைவில் கண்களைப் பதித்தன. அவன் தன் சக்தியை எல்லாம் திரட்டிக்கொண்டு பேசினான்.

''தோழர்களே! அமைதியைச் சிதற விடாதீர்கள். பழிதீர்க்க இதுசமயமல்ல. அளவு கடந்த ஆத்திரம் காரியத்தைக் கெடுத்து விடும். வெற்றியு

[3ம் பக்கத் தொடர்ச்சி]

ஆராய்ச்சி செய்யவேண்டியதொன்றாகும். முதலாவதாக, 'கம்பராமாயணத்தையே இராவண காவியமாகவும் கொள்ளலாம். இராவணனுடைய பராக்ரமத்தையும் கம்பன் சித்திரித்திருப்பதைச் சற்றுக்கவனித்தால், இதனுண்மை விளங்கும்.' என்னும் கூற்றை ஆராய்வோம்.

இராவணனது பராக்ரமத்தை எம்முறையில் சித்திரித்திருக்கிறார் கம்பர்? ஒருவனுடைய நல்ல காரியங்களைச் சிறப்பிப்பதுதான் பராக்ரமமேயன்றி, அவன் மல்லரக்கன், கொடியவன், அரக்கத் தன்மையால் இன்னின்ன கேடுகள் செய்தான் என்பன எப்படியொருவன் பராக்ரமமாகும்? கொலைஞர், திருடர் முதலியோரும் செயற்கரிய அரும்பெரும் ஆற்றல் நிறைந்த காரியங்கள்தான் செய்கின்றனர். அவை உலக மக்களால் 'பராக்ரமம்' என்று புகழப்படுகின்றனவா? கோட்சேயும், உலகம் போற்றும் உத்தமர் காந்தியடிகளைக் கொல்லும் அளவுக்கு அவ்வளவு அரும்பெருங் காரியத்தைத்தான் செய்தான்? பகுத்தறிவுடைய எந்த ஒரு மகனாலும் செய்ய முடியாத காரியந்தானே அது? இச் செயற்கருங் கோட்சே செயலைக் கோட்சேயின் பராக்ரமம் என்னலாமா? அது, 'செயல்' என்னும் சொல்லின் செம்பொருளாகுமா? ஒரு போதும் ஆகாது. இவ்வாறுதானே இராவணன் கொடியவன் என்னும் முறையில், இராவணனுடைய செயற்கருஞ்செயல்கள் பல கம்பரால் சித்திரிக்கப்படுகின்றன? 'அறக்கொடியனான வல்லரக்கன் உலகமாதாவாகிய சீதாபிராட்டியாரைத்தூக்கிச் சென்றனன். பாவியாகிய இராவணன் அன்னை சீதாபிராட்டியைப் பலவாறு துன்புறுத்தினான். பலவந்தம் செய்தான்' என்பன போன்றவைதானே கம்பரால் கூறப்படும் இராவணனுடைய பராக்கிரமங்கள்? இவை எப்படி அவனுடைய பராக்கிரமங்களாகும்? அரக்கனின் அறக்கொடுஞ் செயலன்றோ இவை? இவை, இவ்வுலகையே கட்டியாண்ட, ஏன்? ஏழுலகையுமே கூட ஆண்ட ஒரு தலைவனின் புகழுக்குரியவை! ''ஈச்சுரன்'' என்னும் பட்டப் பெயரைத் தனியுடைமையாகப் பெற்றிருந்த ஒரு பெரும் வீரனுக்குக் கூறப்படும் பராக்கிரமங்கள்! ஆனால் இராவணன் பகைவனான வடவாரிய ராமன் தமிழ் மகன் கம்பரால் கடவுளாக்கப்படுகிறான். தம்மினத்தவளான, தமதரச குடும்பப் பெண்ணான காமவல்லியை (சூர்ப்பநகை) உருக்குலைத்த ராமன்செயல் அறச்செயலாகிறது. அக்கொடுஞ் செயலைச் செய்த ராமன், பெண்கொலை செய்த பாவி அறம் வளர்த்தோனெனப் புகழப்படுகிறான். தன் தங்கையை உருக்குலைத்துக் கொன்ற, மூக்குமுலையை அறுத்துக்கொன்ற கொடியனான ராமன் மனைவியைக் கொல்லாததோடு, யாதொரு தீங்குஞ்செய்யாமல், தமிழர் போர் முறைப்படிஎடுத்துவந்து பாதுகாப்பில் வைத்து, அவளுக்கு வேண்டியவளான திரிசடையைத் துணையாக வைத்துப் போற்றிவந்த இராவணன் செயல் அறக்கொடுஞ் செயல்! இந்நற்செயலைச் செய்த இராவணன் அறக்கொடியோன்! இதுதான் கம்பருடைய கவிச்சித்திரம்போலும்! தன்னாட்டில், தன் அனுமதியின்றி வந்ததே தவறாக இருக்க, தனது தங்கையை, ஒரு குற்றமும் செய்யாத உடன்பிறப்பை உருக்குலைத்துக் கொன்றதற்கு ஒப்பான செயலைத் திருப்பிச் செய்யாது, அவன் மனைவியை எடுத்துவந்து பாதுகாத்து வந்தது எப்படி அறக்கொடுஞ் செயலோ நமக்கு விளங்கவில்லை?

இனி, ஆரிய முனிவர்கள் செய்த கொலை வேள்வியைத்தடுத்த இராவணனது பராக்கிரமம் கம்பரால் அறக்கொடுஞ் செயலெனச் சித்திரிக்கப்படுகிறது. கொலை வேள்வியைத் தடுத்த இரக்கமுள்ள ஒருவன், கொல்வது குற்றமெனக்கூறிய அருட்குணமுடைய ஒருவன், கொடும்பாவி! அக்கொலை வேள்விக்குத் துணை செய்த ஒருவன், அறங்காத்தோன்! இவ்வற நெறியைக் கம்பர் எங்குகற்றாரோ நாமறியோம்? அயல் நாடர்களாகிய அவ்வாரியர்கள் இராவணனுடைய

மனிக்காது...''

அவனால் நிற்க முடியவில்லை. கீழே விழுந்து விட்டான். அவனைச் சுற்றிலும் மனிதக்காடு!

அவன் உதடு 'படபட'த்தது. ''தோழர்களே! பாட்டாளி மக்களே!!'' என்று ஈனக்குரல் எழுப்பினான்.

''சவக்குழி! பாராள்வோர் உதவி கொண்டு, பணம் படைத்த மிருகங்கள் வெட்டிய சவக்குழி!!—ஆணவச்சாந்து குழைத்துப் பூசப்பட்டு, பணக்கற்கள் அடுக்கப்பட்ட சவக்குழி!......அதை நோக்கி இன்று நான்...பலப்பல காலத்திற்கு முன்பே உயிரோடு நீங்கள்... உங்கள் வாழ்வு!...ஆனால் இதோ அதனை முடிவுகட்ட எனது உயிர்!... உங்கள் உணர்ச்சி வாட்களின் முனையிலே என் செந்நீர்த்துளிகள்!!...இன்றல்ல, நாளையல்ல, இனியொரு நாள், அந்த நடமாடும் நாசகால நிழல்களை, அவர்கள் அமைத்த சவக்குழியிலே தள்ளி சமாதி எழுப்புங்கள்!...அதற்கு எனது எலும்புக்கூடு அஸ்திவாரமாகட்டும்!!......''

அவன் மூச்சு அடங்குவதற்கும், கதிரேசரின் 'கார்' சாலைக்கோடியில் 'பூம், பூம்' ஒலியை எழுப்பி, புழுதி கிளப்பி மறைவதற்கும் சரியாக இருந்தது.

நாட்டுக்குள் அவன் அனுமதியின்றி வந்தது முதல்குற்றம். வந்ததோடு, நாட்டு மக்கள் தடுத்துங் கேளாமல், அந்நாட்டு விலங்குகளைக் கொன்று தின்றது இரண்டாவது குற்றம். கண்டுங்காணாதும் திருட்டுத் தனமாகக் கொன்று தின்றது மூன்றாவது குற்றம். அரசன் கட்டளையையும் புறக்கணித்து அக்கொலைத் தொழில் புரிந்தது நான்காவது குற்றம். வடநாட்டரசனைத் துணைக்கழைத்து வந்து வடதென்னாட்டுப் பகையை உண்டாக்கிவைத்தது அய்ந்தாவது குற்றம். இன்னுங்கூறிக்கொண்டே போகலாம். இப்படிப் பல குற்றங்களை அடுக்கடுக்காகச் செய்தவர்களை, அவ்வாறு செய்யாதீர் என்று எச்சரித்தது அறக் கொடுஞ்செயல்! ''அவிசொரிந்தாயிரம் வேட்டலின் ஒன்றன் உயிர் செகுத்துண்ணாமை நன்று'' என்ற வள்ளுவரும் அறக்கொடியோர்தானே? முனிவர்கள் செய்த வேள்வியைத் தடுத்தது. சீதையை எடுத்து வந்து சிறைவைத்தது. இவ்விரண்டு பெருங் குற்றங்களும்—அறக் கொடுஞ் செயல்களும் இராவணன் நிலையில் இருந்து பார்த்தால், அவன் தன் கடமையைச் செய்ததேயல்லாமல் ஒரு போதும் குற்றமாகா. இவ்விடங்களில் இராவணனைக் கம்பர் திட்டியதிட்டு ஒரு உண்மையான தமிழ் மகன் வாயிலிருந்து, அதுவும் செந்தமிழைக் கற்றுணர்ந்து கல்வியில் பெரியவன் என்னும் பட்டம் பெற்ற ஒரு கவிப்புலவன் வாயிலிருந்து வரக்கூடிய சொற்களா? பி ஸ்ரீ ஆச்சாரியார் கருத்துப்படி வைதலை வாழ்த்தாகக் கொண்டால் மட்டும் இராவணன் பராக்கிரமத்தைச் சித்திரித்ததாகும். அப்போது வேண்டுமானால் இராவண காவியம் வேண்டியதில்லைத்தான். அரக்கர் செயலெனக்கூறப்படும் அறக்கொடுஞ் செயலினும் கொடிய அறக்கொடுஞ்செயலான கம்பர்செயலின் முன், எப்படிக் கம்பராமாயணத்தையே இராவணகாவியமாகக் கொள்ளமுடியும்?

இனி, வீராதிவீரனும், பெயரைக் கேட்டாலே பகைவர்களுக்கு எலும்பில் காய்ச்சலுண்டாகும் போர்த்திறமுடையவனும், பகைவர்களாலேயே ''இராவணேச்வரன்'' என்று புகழப் பெற்றவனுமான இராவணனைச் சைத்தானுக்கு ஒப்பிடும் திரு ஆச்சாரியாரின உவமைத்திறனுக்கு ஒப்பானவர் இனியொருவர் தனியாகப் பிறந்து வரவேண்டியது தான்! சைத்தான் கட்டுக்கதைப்படைப்பு. இராவணன் வரலாற்றுத்தலைவன். உவமை எப்படிப் பொருந்துமோ அவரைத்தான் கேட்கவேண்டும். பொருளினும் உவமை உயர்ந்ததாக இருக்கவேண்டும் என்னும் உவமையிலக்கணந் தெரியாத அப்பாவியைக் கேட்டென்ன செய்வது! 'ஆரியர்என்போர்இப்போது இல்லை, ஆரியராவது திராவிடராவது' இது வெறும் புளுகு மூட்டை. நாங்கள் ஆரியரல்லர்' என்னும் திருக்கூட்டத்தைச் சேர்ந்த இவர், ஆரியர் பகைவனான இராவணனைச் சைத்தானுக்கு ஒப்பிடுமளவுக்கு இராவணன் மீது வெறுப்புக்கொண்டதன் காரணந்தான் நமக்கு விளங்கவில்லை?

இனி, 'இராமனுக்கும் இராவணனுக்கும் ஒரே ஒரு அடிப்படையான வித்தியாசம், இராமனுடைய வீரம் அறம் வளர்க்கும் வீரம், இராவணனுடைய வீரம் மறம் வளர்க்கும் வீரம்' என்பது. ஆம், கம்பர் கொள்கைப் படியே, சொற்படியே—ஒரு கிழமூதாட்டியைத் துடிக்கத் துடிக்கக் கொல்வதும், வழியில் தென்பட்டவர்களையெல்லாம் வம்பில் கொல்வதும், எதிர்ப்படும் பெண்களையெல்லாம் மூக்கு முலைகளை அறுத்துக் கொல்வதும், தன்மீது காதல் கொண்டு வந்த ஓர் அரச குடும்பப் பெண்ணைச் சித்திரவதை செய்து கொல்வதும், தனக்கு என்றும் தீங் கொன்றும் செய்யாதவனும், தன்னுடன் எதிர்பொரவராதவனும் ஆன வாலியை, மற்றொருவனோடு எதிர்த்துப் போர் செய்து கொண்டிருக்கும் போது மரத்து மறைவில் இருந்து கொல்வதும், இலங்கை செல்லும் வழியில் கடற்கரையோரத்தில் வாழ்ந்து வந்த ஒரு குற்றமும் செய்யாத குடிமக்களை ஒரு சேரக்கொல்வதும், இலக்குவனோடு பொரும் போது குறுக்கே வந்துஇராவணன் உயிரைக்குடிப்பதும், இன்ன பல இராமன் செயல்களெல்லாம் அறம்வளர்க்கும் வீரச்செயல் தான்! நாம் முன்னர் எடுத்துக்காட்டிய இராவணன் செயல்களெல்லாம் மறம் வளர்க்கும்—பாவத்தை வளர்க்கும்வீரச் செயல்கள்தான்; படிப்போரே தீர்ப்புக் கூறிக்கொள்ளட்டும்.

ராக்ஷஸ ராஜ்யத்தைக் கம்பன் எதற்காக அப்படிவர்ணித்தான்? தன் கவித்திறத்தைக்காட்ட; வலி பொருந்திய அவ்விலங்கையும் ராமபிரானால் அழிக்கப்பட்டது என ராமன் பெருமையை மிகுதிப்படுத்திக் காட்டவே யல்லாமல் ஆச்சாரியார் நினைக்கிற நினைப்புப்படி கம்பர் இராவண பக்தன் அல்ல. ராமபக்தன்தான். கம்பரைவிட அசல் ராம பக்தனும், அசல் ராவணத்துரோகியும் அன்றுமில்லை, இன்றுமில்லை, இனி என்றும் இருக்கப்போவதுமில்லை. மேலும் ஒரு நாட்டைப்பற்றி வர்ணிப்பவன் அந் நாட்டரசனுக்குப் பக்தனாகப் போவதுமில்லை. பகைவனாட்டின் நிலையைக் கூறுதல் இயல்பேயாகும். தமிழ் நாட்டைப்பற்றி வர்ணித்துக் கதை, கட்டுரை, கவிதைகள் எழுதி வயிறு வளர்க்கும் தமிழ் நாட்டுப்பார்ப்பனர்களெல்லாம் தமிழ்த்தலைவர்கள் பக்தர்களா? கவந்தன், விராதன், கும்பகர்ணன் முதலியோரைப்பற்றிக் கம்பர் புனைந்துரைத்துள்ளவற்றைக் கூறப்புகின் அது ஒரு தனிக்காவியமாகும். அது புலவர் குழந்தைபோன்றாரின் வேலை; நமது வேலையல்ல.

ஆகவே, இதுவரையிலும் 'பீ ஸ்ரீ' ஆச்சாரியார் அவர்கள் கம்பர் இராமாயணம் இருக்க இராவணகாவியம் எதற்கு என்று கூறியவிளக்கங்களுக்கு விளக்கந்தந்து அவர் கூற்றைப்பொருந்தாக் கூற்றாக்கினோம், அடுத்த கட்டுரையில் ''இராவண காவியம் எதற்காகச் செய்யப்பட்டது'' என்பதைக் கூறுவோம்.

அறிஞர் அண்ணாதுரை.

ரோமாபுரி ராணிகள்	2	4	0
கம்பரசம்	1	8	0
குமரிக்கோட்டம்	1	0	0
விடுதலைப்போர்	1	0	0
கற்பனைச்சித்திரம்	1	0	0
சிறுகதைகள்	1	0	0
ஆரியமாயை	1	0	0
உலக பெரியார் காந்தி	1	0	0
ரேடியோவில் அண்ணா	0	12	0
வர்ணாஸ்ரமம்	0	12	0
ஏ தாழ்ந்த தமிழகமே	0	8	0
திராவிடர் நிலை	0	6	0
நாடும் ஏடும்	0	6	0
மே தினமும் திராவிடர் கழகமும்	0	5	0
நல்ல தீர்ப்பு	0	4	0
மகாத்மா காந்தி	0	3	0

கிடைக்குமிடம்:

நாதன் கம்பெனி லிமிடெட்,
கச்சேரி வீதி, ஈரோடு.

ரோஜா முத்தையா

மதமும் விவாகமும்.

★

ஒரு நாள்!

லட்சோப லட்ச ஆண்டுகளுக்கு முன்னால்—என்றோ ஒரு நாள் உலகம் தோன்றிற்று. காட்டுமிராண்டிகளாகத் திரிந்த மக்கள், பன்னாட்களுக்குப் பின்னர்; அறிவு விரிவாக, எங்கும் நாகரீகம் பரவ, மானிட வகுப்பு விழிப்புற்றது.

பிறகு மானிட வகுப்பு பல பிரிவுகளாக உருப்பெற்றது. அந்நாளில் அறிவோனாகவும், தந்திரசாலியாகவும் விளங்கிய பார்ப்பனரென்போர்—மக்களின் பிரிவைக்கண்டு நான்கு நிலையை வகுத்தனர். பின்னாளில் அதுவே நான்கு வர்ணத்தாரென பாகுபாடு செய்யப்பட்டது. பிராம்மணன், சத்திரியன், வைசியன், சூத்திரன் என்பதே அந் நான்கு பாகுபாடு ஆகும்.

பாகுபாடு கொண்ட மக்களிடையே, ஓரிணைப்பு உண்டாக்க, அந்நாளைய வல்லுநர் 'மதம்' என்ற பெயரில் ஓரினத்தையும் உண்டாக்கினர்.

மதம் தோன்றிற்று!

மனிதனால்தான் 'மதம்' உருவாக்கப்பட்டது!—

பின்னர் மதம் மதங்கொண்டது! மக்களிடையே—பிரிவுற்ற மானிட வர்க்கத்தினிடையே மதம் தாண்டவமாடிற்று!

மனிதனால் உண்டாக்கப்பட்ட மதம் மனித உலகையே நசுக்கிற்று, நாசமாக்கிற்று. இன்னும் அதன் கோர தாண்டவத்தைக்கண்ணாரக் கண்டு வருகிறோம்.

மானிடப் பிரிவினையிடையே மதம் உண்டாக்கிய பார்ப்பனர்—அந் நாளில் வகுக்கப்பட்ட நான்கு வர்ணத்தார் ஆகியோரிடையே, விவாகச் சடங்குகள் எவ்விதம் நடந்தேறின; என்பதையும் அதன் விதி நிரூபணமும், ஆராய்வது நன்று!

ஆரம்பத்தில்—ஆஃதாவது பன்னூற்றாண்டுகளுக்கு முன்பே, ஆரிய வர்க்க மெனப்படும்—பார்ப்பன சமூகத்தில்—பிரசித்தி பெற்றவனெனப் படும் 'சவுனகன்' என்போன்தான் 'மானிட விவாகச் சடங்கு' என்பதின் நுட்பத்தை அறிந்தவனாம்!

முதன் முதலாக, பார்ப்பன வகுப்பான், சத்திரிய வகுப்புப் பெண்ணை விவாகம் செய்துகொள்ளலாம், எனும் நியதி ஏற்படுத்தினான், அது ஏனோ?.........

அந்நாளில் ஆட்சிபுரிந்த மன்னர்களென்போர் சத்திரிய வகுப்பைச் சார்ந்திருந்ததே காரணம்! மன்னன் மகளை மணந்தால் நாடாளலாம் என்ற எக்களிப்பு இருக்காதா என்ன!

அந்நாள் முதல் அவர்கள் (பார்ப்பனர்கள்) செய்துவந்துள்ள சூழ்ச்சிகளை, அவர்களுடைய, சூத்திரங்களெனப்படும் நூல்களிலிருந்தே; விரிவாக ஆராய்ந்து விளக்குவோம்!

'விவாகமென்பது யாது? அது எதற்காக ஏற்பட்டது?'

'உலகில் ஆணோடு பெண்ணை இணைத்து இல்லறமேனும், நல்வழியில்—காதல் அமுதுண்டு; பிணைத்திருந்து, மழலை மொழியும் நல்மகவீன்று நலனுடன் வாழ்வதே' விவாகம் என்ற சொல்லுக்கு, அதன் தோற்றுக்கு, உரு பொருளாம்!

'வைதீக வாக்ஞயம்' எனும் நூலில் விவாக விதிகளைக் குறிப்பிட்டுள்ளார்கள். அதற்கு முன்பே 'சுவேதுகேது' என்போன் 'விவாகங்களும் நான்கு வர்ணத்தாரும்' என்பதைப் பற்றி நூலியற்றியுள்ளதாகத் தெரிகின்றது.

முன்னாளில் வாழ்ந்த 'அத்திரி' முனிவனின் மகன் 'அர்ச்சநானன்' புரோகிதத் தொழில் கொண்டான். அவனுடைய குமாரன் 'சுவாவசியன்' என்போன் ஒருயாகம் செய்வித்தான். அதுபோழ்து 'சனக மன்னனுக்கு, சாந்திபெற உதவியளித்தான். அதையோர் காரணமாகக் கொண்டு 'சுவாவசியன்' எனும் பார்ப்பனன், மன்னனின் மகளை தான் மணந்து கொள்வதாக வேண்டினான். மன்னன் மகிழ்ந்ததோடன்றி, மனைவி ராணியிடம் சென்று, அன்பே! 'அத்திரிமுனி' வழித் தோன்றிய 'சுவாவச்யன்' எனும் பார்ப்பனன் நம் பெண்ணை விவாகம் செய்து கொள்ள வேண்டுகிறான். சம்மதந்தானா?......! எனவினவ, ராணி சீற்றங்கொண்டு, 'நன்று!' மன்னா, நல்மொழி கூறினாய்! சுவாவச்யன் பார்ப்பனப் புரோகிதன், தொழிலோ தர்ப்பைகையிலேந்துவது, செங்கோலேந்தும் மன்னனின் மகள் அவனை மணப்பதா? மற்றும் அறிவில்சிறந்தோனல்ல. மணக்க உரிமையில்லை. மற்றொரு முனிவனுக்காவது மணமுடித்தால், மகள் வேதமாவது அறிந்து கொள்வாள்!......' எனக் கோபமாகப் பகர்ந்தாள் ராணி.

ராணியின் சொல்லம்புகள் 'சுவாவச்யனின்' இதயத்தை சுட்டது போலும். மறுமொழி கூறாது, நிராசையுடன் தாத்தாவாகிய அத்திரி ஆஸ்ரமத்துக்கு சென்றனன். அங்கே சின்னாட்களுக்குப் பிறகு அவனுக்கு 'இமம்வதந்தே' என்ற வேதமந்திரம் தெரிந்தது. அதன் பிறகு மன்னனும் மகளைக் கொடுத்து விவாகம் செய்வித்ததாக 'பிருக அத்தேவத' என்ற சூத்திரத்தில் காணப்படுகின்றது.

இதைக்கொண்டு யாது விளக்கம் காணலாம்? மன்னன் மகளை அடைய பார்ப்பனன்—அந்நாளில் செய்துள்ள ஓர் சூழ்ச்சியை அறியலாம்.

மேலும்,

மற்றொரு முனிவன்—பார்ப்பனன், 'சியவனன்' என்பவன் 'சர்வாத மன்னனுடைய மகள் 'சுகன்யா' அழகாக இருத்தலைக் கண்டு அவளை அடைய சூழ்ச்சி செய்து மணந்தான்.

'சுவனீயமாவ்யன்' என்பவன் பெரிய தனவான். அவனுடைய மகள் 'மகினா' எழிலாக இருத்தலைக்கண்டு

●

பார்ப்பன வகுப்பினரும், பிற வகுப்பினரும் பண்டைக் காலத்திலேயே இரத்தக் கலப்பு கலந்து விட்டனர். இன்று சுத்தமான பார்ப்பான் என்று சொல்லிக்கொள்ளத் தக்க விதத்தில் ஒரு உருவத்தையும் காட்டவியலாது. ஆதலால் ஆரியர்—திராவிடர் என்பது வீண் மயக்கம், என்கிறார்கள் சிலர்.

தோழர் பரமனின் இக்கட்டுரை, பார்ப்பன வகுப்பினரும் மற்றையோரும் பழங்காலத்தில் மணந்து வாழ்ந்தனர் என்பதை நன்கு விளக்கும். தூய பார்ப்பனன் எவனுமில்லை என்பதையும் நாம் மறுக்கவில்லை.

இவ்வாறு—அக்காலத்தில் வர்ணாந்திர விவாகங்கள் பல நடந்திருந்தாலும், இக்காலத்திலும் நடந்து வந்தாலும் ஒரு உண்மையை யாரும் மறந்துவிடக் கூடாது.

சாதியின் பெயரால் ஒரு சிலர் உயர்ந்தவர்களாகவும்—பலர் தாழ்ந்தவர்களாகவும், சிலர் ஓங்கித் தழைத்தும்—பலர் ஒடுக்கப்பட்டு நலிந்தும் வரும் காட்சி; அதுவும் சட்டத்தின் பெயரால் அனுமதிக்கப்பட்டு வரும் கொடுமை வர்ணாந்திர விவாகங்களால் மறையவில்லை, மறையும் அளவுக்கு அத்தகைய விவாகங்கள் பெருகவில்லை.

மறைந்து ஒழியாததினாலேயே இன்று சாதியின் பேரால் சுரண்டும் குணம் படைத்த கும்பல் ஆரிய இனம், சுரண்டப்பட்டு ஒடுக்கப்பட்டிருக்கும் கும்பல் திராவிட இனம் என்று நாம் கூறுகிறோம். [ஆ—ர்]

●

ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

'கட்சவானமுனி' என்போன் மோகமூற்று, சூழ்ச்சி செய்வித்து விவாகம் செய்து கொண்டதாகத் தெரிகிறது.

இன்னும் 'பிருகுமுனி'யின் மகன் 'ருசிகன்' என்போன் காசிமன்னன் மகள் 'சத்தியவதி'யை மணக்க சூழ்ச்சி செய்தான்.

தெய்வமுனி என்னும் ஒற்றைக்கண் சுக்கிராச்சாரியின்மகள் 'தேவயானி'யை யயாதி மன்னன் விவாகமாடினான்.

விபாண்டக முனிவனின் செல்வ மகன் 'ருசியசிருங்கன்' ரோமபாத மன்னன் மகளாகிய 'சாந்தா'வை மணக்க சூழ்ச்சிதான் செய்ததாகத் தெரிகிறது.

இது போன்ற சூழ்ச்சியால் மணந்த வர்ணாந்திர விவாகங்களின் விளக்கங்கள் பல, வேத, புராண, இதிகாச, சூத்திரங்களில், கணக்கற்றுக் கிடக்கின்றன.

இந்தஆராய்ச்சியில்பார்ப்பனர்களின் விவாகச்சூழ்ச்சிகளைமட்டுமின்றி மற்ற முப்பிரிவுகளாகிய மூன்றுவர்ணத்தார்களுடைய விவாகச் சடங்குகளின் விரிவையும் ஆராய்வோம்!

உண்மையிலேயே பாரதநாட்டுச் சரித்திரம், புத்தர் பிரானின் காலத்திற்குப் பிறகுதான்—சரியான உருவம் பெற முடிகிறது. பவுத்தர்களுடைய புத்தகங்களில், அனேக இடங்களில் வர்ணாந்திர விவாகங்களைப் பற்றிய நுணுக்கச் செய்திகள் காணக் கிடக்கின்றன!

புத்தரின் காலத்திலேயே இருந்ததாக எண்ணக்கூடிய கோசல நாட்டு மன்னன் 'பிரசேநி' என்பான், 'மகாநாமன்' என்றவனுக்கு தாசி வயிற்றில் பிறந்த 'மல்லி' அல்லது 'வாசபகந்தே' என்ற பெண்ணை மணந்ததாகத் தெரிகிறது.

இரண்டாவது நந்த னென்பான் சூத்திர வகுப்புப்பெண்ணை மணந்ததாகத் தெரிகிறது. சந்திர குப்த மன்னன் சூத்திரப்பெண்ணின் வகையைச் சார்ந்தவன் என்பது ஆராய்ச்சியாளர் சிலருடைய அபிப்ராயம்.

மேலும் சந்திரகுப்தன், சிரியா நாட்டு மன்னன் 'செல்யூகஸ் நிகேடர்' என்பவனுடைய மகளை விவாக மாடினான். இவர்களுக்குப் பிறந்த 'பிந்துசாரன்' சம்பா நகரத்துப் பார்ப்பன னொருவனின் மகளான 'சுபத்ராங்கி' என்பவளை மணந்தான். அதாவது வைசியனுக்கும், சிரியா (மேனாட்டு) பெண்ணுக்கும் பிறந்தவன் பார்ப்பன மங்கை ஒருத்தியை மணந்ததென்றால், அவர்களுக்கு என்ன மதம்? எந்தக் கோத்திரம்? என்ன குலம்?......

ஷை பிந்துசாரனுக்கும், சுபத்திராங்கி என்னும் பார்ப்பனத்திக்கும் பிறந்தவர் 'அசோகன்' 'விகதாசோகன்' என்பவர்கள் என்று நேபாளநாட்டுச் சரித்திர ஏடுகளில் விளக்கப்பட்டுள்ளன.

இன்னும் பரோடாநாட்டு நூல்நிலைய அரங்கத்திலுள்ள 'சம்பிரதி கதை' 79ம் பக்கத்தில் இந்தக் கதை இருப்பதாக—டி. எல். ஷா, தன்னுடைய இந்து தேச சரித்திரத்தில் எழுதியுள்ளார். சிம்மள தேசத்துச் சரித்திரத்தில்நுணுக்கங்காணும்போது 'அசோகன்' ஒரு வைசியனுடைய மகள் 'தேவி' என்பவளை மணந்ததாகவும், அவர்களுக்கு 'மகேந்திரன்' என்ற குமாரனும், 'சங்கமித்திரை' என்ற மகளும் பிறந்ததாகவும் தெரிகிறது.

மற்றும் 'குண்டலகேசி' எனும்பெண், தன்னுடைய வீட்டின் மேல்மாடியிலிருந்த ஒரு திருடனைக் காதலித்து, தாய் தந்தைகளறியாது இணைந்தனரென்றும், பிறகு அவனுக்கும் அவளுக்கும் விவாகம் நடந்ததாகவும் பவுத்தர்களுடைய நூல்களில் தெரிகின்றது.

அரிஜன நாயகனாகிய 'திரிசங்கன்' என்பானுடைய மகன் 'சர்தூவ கர்ணன்', ஒரு பார்ப்பனனுடைய மகளாகிய 'சுதாமை' எனும் பெண்ணைக் கண்டு மோகித்து, இருவரும் விவாகம் செய்து கொண்டதாக மற்றொரு பவுத்தர் நூல் கூறுகிறது. அந்நாள் முதலே பார்ப்பனப்பெண் மற்றையோரை மணப்பது என்பது இருந்தனவென்பது புலனாகிறது.

இன்னும் பன்னூல் ஆராய்ச்சி செய்யப் புகுங்கால், இந்நாள் பார்ப்பனன் சொல்லும் வேதமும், சூத்திரமும், மேலும் 'மனுதர்ம சாத்திரம்' முதலான அனைத்தும் முன்னாளில் வாழ்ந்த பார்ப்பனர்கள்—விளக்காமல் விளக்கி—மக்களை ஏமாற்றவே எழுதத்துணிந்தனர் எனத் தைரியமாகக் கூறலாம்.

முன்னாளில் மக்களிடையே பிரிவுகளுண்டாக்கியதுமன்றி, மதமெனும் பேயைக்காட்டி பயமுறுத்தினார்கள். அன்று வாழ்ந்த மனித உலகம் பார்ப்பனரின் சூழ்ச்சியில் மயங்கி வீழ்ந்தது.

மதமென்பது மக்களுக்கு அறிவூட்டும் ஓர் கலை என நினைத்தனர் அன்றைய அறியா மக்கள்.

மதம் ஒழிய வேண்டும்!

மக்கள் உணர்வு கொண்டால் மதம் தானாகவேமடியுமென்பார் ஒருசாரர்.

ஆனால்!

பன்னூற்றாண்டுகளாக நாட்டினில் ஏற்பட்ட கலகங்கள்—சண்டைகள் கோரமான யுத்தங்கள், அனைத்தும் 'மதம்' எனும் கோரப் பேயின் தாண்டவம்தான்.

மதம் பல்லாயிரக் கணக்கான—லட்சக் கணக்கான மக்களைப் பலி வாங்கி விட்டது!......

இனி மதத்தை ஒழிக்க மனிதனால் வேறொரு உரு—செயற்கை வினோதமாக விஞ்ஞான உலகில்தான் தயாரிக்க வேண்டும்!

ஆனால், மதத்தை அணுகுண்டாலும் அசைக்க முடியாது! வெடிகுண்டாலும் ஒழிக்க முடியாது. அதற்கெனத் தனியாக ஓர் அரிய பொருள் தயார் செய்யவேண்டும்!

மதப்பேயினாலேயே மாண்ட மகான் 'காந்தியார்' வளர்த்த 'அகிம்சை'—ஓர் அற்புத செடி, அதில் மலர்ந்ததுதான 'அன்பு' அதை—அன்பைக்கொண்டு—மக்களை மாய்க்கத் துணிந்த, மதத்தை ஒழிக்க முடியும்; எல்லா மக்களிடையேயும் 'அன்பு' பரவ வேண்டும்!

இஃது 20வது நூற்றாண்டு. மக்கள் பகுத்தறிவின் மூலம், பரந்த அனுபவத்தை அறிந்து, அறிஞர்களாகவிளங்கக்கூடிய, உதயகாலமிது! இந்நாளில் மதப்பேய் ஒழிந்ததென்றால்—தனிப்பெருமையாம்!

அஃதே போன்று விவாகச்சடங்குகளில், மதத்தையும்—குலத்தையும் குறுக்கீடாக வைத்து, பண்டமாற்றுப்பொருளாக்காத—உண்மையான—இயற்கையான—காதல் மணம், கலப்பு விவாகங்களே இன்றையத் தேவை. ஆம்—அதுதான் உடனடியாகத் தேவை!

வாழ்க வையகம்!
வாழ்க தமிழ்!!

"பரமன்"

புதிய வெளியீடுகள்.

1. தீண்டாமை ரூ. 1—8—0
2. இதோ! பெரியாரில் பெரியார் 0—6—0
3. திராவிடக் கழக லட்சியம் 0—4—0
4. மொழி—எழுத்து 0—4—0
5. வாழ்விலோர் திருநாள் 0—4—0

வியாபாரிகளுக்குக் கமிஷன் உண்டு.

கவிஞர் பாரதிதாசன்.

பாரதிதாசன் கவிதைகள்	3	8	0
பாண்டியன் பரிசு	3	8	0
எதிர்பாராத முத்தம்	1	4	0
அழகின் சிரிப்பு	1	0	0
தமிழ் இயக்கம்	1	0	0
காதல் நினைவுகள்	0	12	0
இசையமுது	0	12	0
முல்லைக்காடு	0	12	0
நல்லதீர்ப்பு	0	10	0
கவிஞர் பேசுகிறார்	0	10	0
குடும்பவிளக்கு I	0	10	0
,, II	0	6	0
அமைதி	0	8	0

விற்பனை உரிமையாளர்
நாதன் கம்பெனி லிமிடெட்
கச்சேரி வீதி, ஈரோடு.

Edited, Printed and Published by N. Karivaradaswamy at the Tamilian Press Old No. 42. New No. 59, Cutcherystreet, ERODE